Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 19 ஞாயிற்றுக்கிழமை (03.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 196

வாழ்நாள் முழுவதும்
வளமுடன் வாழ
அண்ணா
ஜீவாகாரம்
உடனடியாக உண்ணக்கூடிய
நிலையில் உள்ள சத்துணவு
விபரங்களுக்கு
அண்ணா கோப்பிக் கடை
இல.4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

## பொதுக்கட்டமைப்பில்

# அரசும் புலிகளும் ஒப்பமிட முடியுமென்றால்

# முஸ்லிம் தரப்பு ஒப்பமிட முடியாதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் பசீர் சேகுதாவூத்

(கொழும்பு)

**பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் தேசியமட்டக் குழுவில் உறுப்பினர்களைக் கொண்டுள்ள அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒப்பமிடமுடியும் என்றால் தேசியமட்டக் குழுவில் சம பிரதிநிதித்துவத்தை கொண்டுள்ள முஸ்லிம் சமூகப் பிரதிநிதி ஒருவரை கட்டமைப்பு ஆவணத்தில் ஒப்பமிட ஏன் அனுமதிக்கவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான பசீர் சேகுதாவூத் கேள்வி எழுப்பியுள்ளார்.**

ஏறாவூர் அரச வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழிலாளர் கௌர விப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு என்பது வெறுமனே சுனாமி நிவாரண பணிகளை மட்டும் மேற் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு ஏற் பாடு அல்ல. மாறாக வடக்குக் கிழக்கில் கடந்த இரண்டு தசாப்த காலமாக இடம் பெற்றுவருகின்ற கோர யுத்தத்தினால் பாதிக் கப்பட்டுள்ள மக்களின் வாழ்வை சீர்படுத் தும் பொறுப்பையும் அதன் நீதிமூலங் களையும் நிர்வாகக் கட்டமைப்பையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் மீனவர்கள் நாளை ஆர்ப்பாட்டம்

(திருநெல்வேலி)

குருநகர்ப் பகுதியில் இராணுவத்தின ரால் அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்கி மீனவர் ஒருவர் இறந்த சம்பவத்தைக் கண்டித்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

குருநகர்ப் பகுதி மீனவர்கள் ஒன்றி ணைந்து இப் போராட்டத்தினை மேற் கொள்ளவுள்ளனர்.

குருநகர் துறைமுகத்தை மறித்து நாளை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (ச-43,4)

## இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட

# மின்சார வேலியில் சிக்கி மீனவர் பரிதாப மரணம்

## குருநகர்ப் பகுதியில் சம்பவம்

குருநகர் பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த மின்சார முட்கம்பி வேலியில் சிக்கி நேற்று அதிகாலை மீன வர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தர்மன் ராஜு (வயது 21) என அடையாளம் காணப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட இவரது சடலம் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை பிரேத அறை

3.30 மணியளவில் கரைதிரும்பி துறைமுகம் ஊடாக வீடு திரும்பும்போது இராணுவத் தினரின் முட்கம்பியில் பாய்ச்சப்பட்ட மின் சாரம் தாக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் அப் பகுதி மீனவரி டையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது.

இதேவேளை இச் சம்பவத்தையடுத்து

## பொலிஸ் உத்தியோகத்தர் கல்குடாவில் சுட்டுக்கொலை

(கல்குடா)

கல்குடா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் நேற்று நண்பகல் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கல்குடாப் பொலிஸ் நிலைய பிரதான நுழைவாயிலில் குறித்த பொலிஸ் உத்தி யோகத்தர் சிவில் உடையில் நின்றிருந்த வேளை துவிச்சக்கரவண்டியில் வந்த இனந் தெரியாத நபர் ஒருவர் பொலிஸ் உத்தி யோகத்தருடன் சிறிது நேரம் உரையாடிய

பொலிஸ் உத்தியோகத்தர் சம்பவ இடத் திலேயே உயிரிழந்துள்ளார். இவர் ரொகான் சமிந்த சிறிதுங்கா (வயது 28) என அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

கொலையுண்ட பொலிஸ் உத்தியோ கத்தரின் தலையிலும் மார்புப் பகுதியிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட் டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டுவருகின்ற

உயிரிழந்தவர் தர்மன ராஜு (வயது 21) என அடையாளம் காணப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட இவரது சடலம் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குடாக்கடல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்றிருந்த அவர் நேற்று அதிகாலை

டையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை இச் சம்பவத்தையடுத்து குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் உட்பட மீனவர் சங்கம் நேற்று மாலை குருநகர் கடற்படை (12 ஆம் பக்கம் பார்க்க)

தெரியாத நபர் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தருடன் சிறிது நேரம் உரையாடிய தன் பின்னர் அவரைக் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாக கல்குடாப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் விசேட விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-4)

### ஐக்கிய தேசியக் கட்சியின்

# மக்கள் சக்தியை வெளிப்படுத்தும் தொடர் ஆர்ப்பாட்டப் பேரணி

ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சக்தியை வெளிப்படுத்தும் பேரணி நேற்று ஆரம்பமானது.

'மக்களை ஏமாற்றிய கூட்டமைப்பு அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புங்கள்' என்ற தொனிப்பொருளில் பேரணியினை கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜயசேகரவால் ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணியளவில் சமய நிகழ்வுகளுடன் தெவிநுவர என்ற இடத்தில் ஆரம்பமான இப் பேரணி மிருஸ என்ற இடத்தில் முடிவடைந்தது. இதேவேளை இன்று காலை 10 மணியளவில் மிருஸ என்ற இடத்தில் ஆரம்பமாகும் இப் பேரணி மாலை வேளை கொக்கல என்ற இடத்தில் முடிவடையும்.

இப் பேரணியில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான காமினி லொக்குகே, திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டார்கள். (ச-4)

### அரசியல்துறைப் பொறுப்பாளருடன்

# உலகவங்கி குழுவினர் நேற்றுச் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் உலகவங்கிப் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இச் சந்திப்பு நேற்று முற்பகல் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் உள்ளிட்டோரும் உலக வங்கியின் தரப்பில் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீட்டர் ஹரோல்ட் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி வதிவிடப் பிரதிநிதியுடன் கூடிய முக்கிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பில் அரசுக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)


SWISS
Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# மானிடத்தை நேசிக்கத் தெரிந்தவனே மகிழ்ச்சியான வாழ்வினைப் பெறுவான்

இன்றைய காலங்களில் பலவிதமான அறிவித்தல்கள் விடப்படுவதை நாம் அறிந்திருக்கின்றோம். தண்ணீரைக் கொதிக்கவைத்து ஆறிய பின் பருகினால் சுகாதாரத்துக்கு நல்லது. இல்லையேல் கொதிக்க வைக்காத நீரில் நோய்க் கிருமிகள் இருந்து வாந்திபேதி, வயிற்றுழைவை உண்டாக்கும். சுகாதாரப் பகுதியினர் மக்கள் நன்மைக்காக இப்படியான அறிவித்தல்களை விட்டு பொதுப்பணி ஆற்றுகின்றார்கள்.

இயேசுக் கிறிஸ்துவை மீட்பாராக ஏற்றுக்கொண்ட மக்களும் காலப்போக்கில், உலகப் போக்கில் வந்தபோது புனித பஷலடியார் உரோமை மக்களை இப்படிக் கண்டித்தார். "நீங்கள் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்ந்தால் சாகத்தான் போகின்றீர்கள்; ஆனால் தூய ஆவியின் துணையால் உடலின் இச்சைகளைச் சாகடித்தால் நீங்கள் வாழ்வீர்கள்" (உரோமையர் 8:13) என்று அறிவுரை கூறி வைத்தார்.

**இயேசுவிலேசரணடைவோம்**

ஒவ்வொரு மக்களும் தாம் தாம் கடைப்பிடிக்கும் நெறிகளுக்கு ஏற்ப வாழவேண்டும் என்று நெறிகள் கற்பிக்கின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறு வாழவேண்டும் என்பதை பஷலடியார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந்தால் கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த அவரே உங்களில் குடிகொண்டிருக்கும் தம் ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர் பெறச் செய்வார்" (உரோ. 8:11)

இந்த நம்பிக்கை எம்மில் குடிகொண்டிருந்தால் கிறிஸ்து காட்டிய வழிகளிலே அவரது வார்த்தையின்படியே நாம் வாழவேண்டும். அப்போதுதான் கிறிஸ்தவர்கள் என்ற பெயருக்கு நாம் தகுதியுடையவர்கள்.

மகிழ்வையும் நம்பிக்கையையும் நாடுவோம். இந்த உலகத்தின் துன்பங்கள எம்மை வருத்துகின்ற போது சுமைகள் எங்களை வாட்டுகின்ற போது நாம் எங்கு செல்வதென்று திக்குத்திசை தெரியாது மந்திர வாதிகளை குறி சொல்பவர்களை பேய்க்காரர்களை எல்லாம் நாடி ஓடிச்சென்று இன்னும் அதிகமான சுமைகளை எம்மில் சுமத்திக்கொள்கின்றோம்.

இயேசு ஆண்டவர் தெளிவாகவே கூறிவைத்துள்ளார். "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் நான் கனிவும் மனத்தாழ்ச்சியும் உடையவன்" (மத்தேயு 11:28)

## பரமபிதா காட்டியபாதை

எங்கள் சுமைகள் பாரங்களை எல்லாம் போக்கி எம்மை ஏற்றுக்கொள்ள இயேசு காத்துக்கொண்டிருக்கின்றார். எனவே உலகப் போக்கில் விடுதலை தேடிச்சென்றால் சாவது நிச்சயமானது. எனவே இயேசுவிலே எம்மைச் சங்கமிக்கச் செய்வோம். அவா மகிழ்வும் நம்பிக்கையும் அருள்வார்.

குழந்தை உள்ளம் வேண்டும்.

நேரிய மனத்தவர்கள் கடவுளுக்கு நெருக்கமாக இருப்பர். ஞானிகள், விவேகிகளைவிட இறைவன் குழந்தை உள்ளம் படைத்தவர்களையே அதிகம் விரும்புகின்றார். "நீங்கள் குழந்தைகள்போல் மாறாவிடில் விண்ணரசில் நுழையமாட்டீர்கள்" என்று இயேசுவே கூறிவைத்துள்ளார். இங்கே இதன் கருத்தை நாம் ஆராய்வோம். பிறருக்கும் துரோகம் செய்யாமல் நல்ல வாழ்வை வாழபவர்கள் குழந்தைக்குச் சமமானவர்கள். பிறரை வஞ்சியாதவன் கடவுளுக்கு பணிந்து வாழ்பவன்.எனவே கடவுள் மண்டலங்களில் அலல நம்மோடு நம் அருகிலே நம் அயலவர்களிலே தான் இருக்கின்றார். காந்தியடிகள் இப்படிக் கூறுகின்றார். "கடவுளை மனித சமூகத்தில் வட்டு வெளியே காணமுடியாது" என்ற குறிப்பும் தெளிவாக்குகின்றது. மானிடத்தை நேசித்து தேவனிடம் செல்வோம் மனம் நிறை வாழ்வை பெறுவோம்.

**அன்ரனி பீற்றர்**


**சிறுவிளம்பரம்**

**மலயாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர் கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
(9567) **இரவு 8.30 வரை**

**வெளிவந்துவிட்டது**

**க.பொ.த. உயர்தரப் புவியியல் மாணவர்களுக்கான சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும் ஆசிரியர் கணேசபிள்ளை சிவகரன் (B.A.Hons DiplnEd) எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும்.** (9720)


## சொந்தக் கட்டடத்தில் சாவகச்சேரி நகரசபை

சாவகச்சேரி நகரசபை புதிதாக புனரமைப்புச் செய்யப்பட்ட சொந்த கட்டடத்தில் இம்மாதம் முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

இதுவரை காலமும் நகரசபை நூலக மேல்மாடியில் இயங்கிவந்ததோடு 1995ஆம் ஆண்டோடு சொந்தக் கட்டடத்தினை இழந்து வெவ்வேறு இடங்களில் நகரசபை அலுவலகம் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-21)

## இராசிபலன்

**03.07.2005**
**(ஆனி 19, ஞாயிற்றுக்கிழமை)**
**துவாதசி பிற்பகல் 2.33 மணிவரை**
**கார்த்திகை முற்பகல் 11.52 மணிவரை**
**இராகுகாலம் 4.27 - 05.57 மணிவரை**
**சுபநேரம் 08.57 - 10.27 மணிவரை**
**பிரதோஷவிரதம்**

**மேடம்:** தனவிரயம், எடுத்தகாரியம் கைகூடும், மனஸ்தாபம், போசனசுகக்குறைவு.

**இடபம்:** தெய்வ சிந்தை, புதிய முயற்சி, போசன சுகம், புதிய தகவல்.

**மிதுனம்:** சுபசெலவு, அமைதிக்குறைவு, காரிய தாமதம், வேலைச்சுமை.

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியின் 27ஆவது ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு அட்டன் சக்தி மண்டபத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-2)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம் இருதய நோயாளர்களுக்கு நிதியுதவி

(தென்மராட்சி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி பயிலும் செல்வன் மோகனதாஸ் பிரகாந்தன் என்பவரின் இருதயத்தில் துவாரம் நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஒருலட்சத்து ஏழுபத்தையாயிரம் ரூபாவை மருத்துவச் சேவைக்கான அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவ் அன்பளிப்பில் ஒருலட்சத்து 50ஆயிரம் ரூபாவை அண்மையில் லண்டனில் இருந்து சாவகச்சேரிக்கு வருகை தந்திருந்த திருமதி ஜமுனா பொபி சற்குணம் என்பவர் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேசமயம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்களால் 25ஆயிரம் ரூபா சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

அத்தோடு கச்சாய் வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த இருதய நோயாளியான திருமதி குணச்செல்வி விநாயகமூர்த்தி என்பவருக்கு 58ஆயிரம் ரூபாவை லயன்ஸ் கழகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (அ-16)

## ச.ச.நிலையங்களுக்கு

## சேது சமுத்திரத்திட்டத்துக்கு எதிராக மக்கள் இயக்கம் உருவாக்கம்

(கொழும்பு)

சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு போராட்டங்களை மேற்கொள்ளுவதற்காக மக்கள் இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் என பெயரிடப்பட்டுள்ள இந்த அமைப்பில் சகல இனத்தவர்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

அரசியல் கட்சிகள் பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கையின் பொருளாதார திட்டங்களுக்கு ஏற்படவுள்ள பாதிப்புக்கள் பற்றியும் இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான இந்திய அரசின் உள்நோக்கங்கள் பற்றியும் இந்த இயக்கம் மக்களுக்கு விளக்கிக்கூறவுள்ளது.

அத்துடன் சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிராக தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் இந்த இயக்கம் தீர்மானித்துள்ளது. இனமத வேறுபாடின்றி சேதுசமுத்திரத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே தமது பிரதான நோக்கம் என இந்த இயக்கத்தின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்னும் சில நாட்களில் கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன. (அ-9)

## பொது நூலக அங்கத்துவம் புதுப்பித்தல் கட்டணம் பொதுமக்களின் வாசிப்பு ஆர்வத்தை மழுங்கடிக்கிறது

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து கொண்டவர்கள் தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்வதற்குக் கட்டணமாக ரூபா 250ம், புதுப்பித்தல் விண்ணப்பப்படிவத்துக்கு ரூபா 25ம் கேட்கப்பட்டு வருவது நிலையில், யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் ஆர்வத்துடன் அங்கத்தவர்களாக இணைந்து புத்தகங்களைப் பெற்று வாசித்தவர்கள் தொடர்ந்தும் அதிகமான பணத்தை புதுப்பித்தலுக்குச் செலுத்துவதில் ஆர்வம் காட்டாமல் இருப்பதாக

**மிதுனம்** சுபசெலவு, அமைதிக்குறைவு, காரிய தாமதம், வேலைச்சுமை.

**கடகம்** கீர்த்தி, தொழில் வருமானம், தெய்வசிந்தை, முயற்சி கைகூடும்.

**சிங்கம்** அதிகாரம், நல்ல செய்தி, காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி.

**கன்னி** புதிய திட்டமிடல், முயற்சி தாமதம், கட்டுப்பாடு, பிதா வழிஉறவு.

**துலாம்** காரிய தடங்கல், ஆரோக்கியக்குறைவு, பணக்குறைவு, அபகீர்த்தி.

**விருச்சிகம்** குடும்ப நன்மை, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, பிரயாண நன்மை.

**தனுசு** ஆரோக்கியம், நல்ல முயற்சி, போசன சுகம், உற்சாகம்.

**மகரம்** குடும்பக்கவலை, உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம், பணவிரயம்.

**கும்பம்** மாதா சுகம், சுபசெலவு, கடின முயற்சி, கல்வியில் ஆர்வம்.

**மீனம்** கூட்டு முயற்சி, தனவருவாய், ஆரோக்கியம், புதிய தகவல்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

**- வளவன்**

லயன்ஸ் கழகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

(அ-16)

## ச.ச.நிலையங்களுக்கு இடையில் போட்டி

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி வாதத்தினையொட்டி சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களிடையில் அவற்றின் வளர்முக செயற்பாடுகள் சம்பந்தமான போட்டி ஒன்றினை சாவகச்சேரி நகர சபை நடாத்தவுள்ளது.

முதல் மூன்றிடங்களைப் பெறும் சனசமூக நிலையங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுமென செயலாளர் தெரிவித்துள்ளார்.

(ந-21)

## தென்மராட்சியில் பல கிராமங்கள் பின்தங்கிய நிலையில் மக்கள் அதிருப்தி

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள பல பின்தங்கிய கிராமங்களில் எத்தகைய அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்படாமல் இருந்துவருவது குறித்து இப்பகுதிகளைச் சேர்ந்த சமுதாய ஆர்வலர்கள் பெரும் கவலையும் அதிருப்தியுமடைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இத்தகைய பின்தங்கிய கிராமங்களில் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகள் அமுல் செய்யப்படும் என வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்த போதிலும்கூட எதுவுமே செயலில் இடம்பெறவில்லை எனவும் கூறப்பட்டு வருகின்றது.

இதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்திப்பணிகள் தொடர்பாகக் கடந்த காலங்களில் பல உயர்மட்டக் கூட்டங்களும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றிருந்த போதிலும்கூட, எதுவுமே செயல்வடிவம் பெறாமல் இருந்துவருகின்றமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ-16)

கொண்டவர்கள் தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்வதற்குக் கட்டணமாக ரூபா 250ம், புதுப்பித்தல் விண்ணப்பப்படிவத்துக்கு ரூபா 25ம் கேட்கப்பட்டு வருவது குறித்து அங்கத்தவர்கள் பெரும் அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ளனர்.

இப் பொது நூலகத்தில் புதிதாக அங்கத்தவராகச் சேர்பவர்களிடம் இருந்து ரூபா 550 பெற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. இந்

கத்தவர்களாக இணைந்து புத்தகங்களைப் பெற்று வாசித்தவர்கள் தொடர்ந்தும் அதிகமான பணத்தை புதுப்பித்தலுக்குச் செலுத்துவதில் ஆர்வம் காட்டாமல் இருப்பதாகவும் அறியப்படுகின்றன.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் இந்த நடவடிக்கையானது பொதுமக்கள் மத்தியில் வாசிப்பு ஆர்வத்தை மழுங்கடிக்கும் செயல் எனப் பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

(அ-16)

## தேசியப் பாதுகாப்புச்சபை ஆராய்வு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வழங்கிய 14நாள் கால அவகாசம் தொடர்பாக ஆராய்வதற்காக தேசியப்பாதுகாப்புச் சபை அவசரமாகக் கூடியுள்ளது.

இக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் அறிவிப்பால் எழுந்திருக்கும் நெருக்கடி நிலை மற்றும் மட்டக்களப்பில் 3 படையினர் சுட்டுக் கொல்லபபட்ட சம்பவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை விடுதலைப்புலிகள் வழங்கிய 14நாள் கால அவகாசம் தொடர்பாக தாம் உடனடியாக எந்தக் கருத்தையும் வெளியிடமுடியாதென பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார், (ந-4)

## றெஜினோல்ட் கூரே மீண்டும் முதலமைச்சர்?

(கொழும்பு)

முன்னாள் மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே மீண்டும் முதலமைச்சராக இன்று சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளதாக மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி உட்பட எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு றெஜினோல்ட் கூரேக்கே கிடைத்துள்ளது. மேல்மாகாண ஆளுநர் தலைமையில் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இக்கூட்டத்தில் ஆளும் கட்சியையும், எதிர்க்கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர்.(இ-4)

# கொழும்பில் ஒரு குண்டுவெடித்திருக்குமாயின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் சீர்குலையும்

## அனுரா பண்டார நாயக்க

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் ஒரு குண்டு வெடிததாலும் ஸ்ரீலங்காவின் ஒட்டுமொத்த பொருளாதாரமுமே சீர்குலைந்துவிடும் என்று அமைச்சர் அனுரா பண்டார நாயக்க கூறியுள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பண்டாரநாயக்க மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரைப் பயணத்தை மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு உரிமை இருக்கிறது ஆனால் ஜனாதிபதி தேர்தலுக்கு ஓராண்டுக்கு மேல் இருக்கும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அது குறித்து அவசரப்படவில்லை ஐ.தே.க.வின் பரப்புரை நிகழ்ச்சிகள் குறித்து நாம் கவலைப்படவில்லை ஜனாதிபதி தேர்தல் குறித்து அவசரப்பட வேண்டாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எங்களிடம் கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கூட்டப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து எந்தவொரு முடிவும் மேற்கொள்ளவில்லை ஊடகங்கள் தான் அப்படி எழுதுகின்றன.

அரசை கடுமையாக சாடி வருகிற அத்துரலிய ரத்தின தேரரும் ஓமல்பே சோபித தேரரும் போர்க்காலத்தில் ஒரு துளி கூட பங்காற்றவில்லை.

கொழும்பில் இனி ஒரு குண்டுவெடித்தால் ஸ்ரீலங்காவின் ஒட்டுமொத்த பொருளாதாரமுமே சீர்குலைந்துவிடும்.

இந்த பௌத்த பிக்குகள் போர் முனைக்கு செல்லத் தயாராக இருக்கிறார்களா? வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்களிடம் நாம் அனுதாபம் கொள்ளவில்லையெனில் நம்மை உணமையான சிங்கள பௌத்தர்கள் என்று எப்படி அழைத்துக் கொள்வது?

அரசு கவிழ்ந்துவிடும் சூழலிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இழப்பு ஏற்படும் சூழலிலும் கூட மிகத் தெளிவாக பொதுக்கட்டமைப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்படுத்தியுள்ளார்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி. நடத்தும் வீதி ஆர்ப்பாட்டங்களை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என்றார். அவர். (ற)

## இரவிராஜ் புங்குடுதீவு விஜயம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகள் சம்பந்தமாக மக்களை நேரில் சந்தித்து அறிந்துகொள்வதற்காக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரவிராஜ் இன்று மாலை 5 மணிக்கு தென்னிந்தியச் திருச்சபை வளாகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்ள்வுள்ளார்.

மின்சாரம், குடிநீர், பாடசாலைகளின் தேவைகள், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

ஆதலால் அனைத்து தீவுப் பகுதி மக்களையும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளரும், புங்குடுதீவு தென்னிந்திய திருச்சபை நிர்வாக உத்தியோகத்தருமாகிய ஏ.ஆர். அம்பலவாணர் வேண்டுகோள் விடுக்கின்றார். (ற)

# பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க தேசிய கொள்கை உருவாக்கக் கோரிக்கை

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான தேசியக் கொள்கை ஒன்று இல்லாமையால் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை மேலும் பத்தாயிரமாக அதிகரித்துள்ளதாக ஒருங்கிணைந்த வேலையற்ற பட்டதாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வு வழங்குவது பலன்தராது என சங்கத்தின் இணைப்பாளர் வசந்தகமல் கபில விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பட்டதாரிகளின் வேலை வாய்ப்பு பிரச்சினைக்கு தேசிய கொள்கை ஒன்றை உருவாக்குமாறு ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படடுள்ளதாகவும், இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனினும் 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேவைவாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையை பாராட்டுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் இணைத்துக்கொள்ளப் பட்ட சகல பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனங்களை வழங்க தேவையான நடவடிககைகள் மேற்கொண்டுவருவதாக பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளாா.

கடந்த யூன் மாதம் 30 ஆம் திகதி முதல் சகல பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக நடைமுறைச் சிக்கல்கள் காணப்பட்டதால் இதற்கான திகதியில் மாற்றம் ஏற்பட்டதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பாக உரியவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# வெளிநாட்டு உதவிகள் அனைத்தும் மத்திய வங்கியில் ஆவணப்படுத்தப்படும்

## -மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண சபைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் நிச்சயமாக மத்திய வங்கியில் ஆவணப்படுத்தப்படும்.

அவ்வாறு கிடைக்கும் நிதி திறைசேரியூடாக மாத்திரமே வெளியில் விடப்படும் என்பது பற்றி உறுதியாக கூறமுடியும் என மத் திய வங்கியின் ஆளுநர் சுனில் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் திறைசேரியூடாக விடுவிக்கப்பட்ட பின்னர் அதற்கு என்ன நடக்கிறது என்பது பற்றி தேடிப் பார்க்கும் அதிகாரமானது மத்திய வங்கியின் செயற்பாட்டிற்கு உட்பட்டது அல்ல.

ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையில் திறைசேரியின் பங்களிப்பு குறித்து விளக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு அடிப்படை அற்றது. அவ்வாறு குறிப்பிடப்படவேண்டிய அவசியம் இல்லை. இலங்கைக்கு கிடைக்கும் எந்தவொரு வெளிநாட்டு உதவியும் மத்திய வங்கிக்கு வந்து சேருவது வழமையானது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# இந்து சமுத்திரத்தில் சுனாமி முன்னெச்சரிக்கை மையம்

இந்து சமுத்திரத்தில் சுனாமி முன்னெச்சரிககை ஒழுங்குமுறை ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் சபையின விஞ்ஞானம் மற்றும் கலாசார அமைப்பு இணக்கத்திற்கு வந்துள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளும், கடல்சார் அறிவியல் ஆராய்ச்சியாளர்களும், பூகம்பம் மற்றும் எரிமலை ஆய்வு உபகரணங்கள் வலய அமைப்பை உருவாக்க இணங்கியுள்ளன.

இதேவேளை, ஆழ்கடலில் ஏற்படும் மாற்றங்களை உணர்த்துவதற்கான உபகரணங்களையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த உபகரணங்களின் மாதிரிக் கட்டமைப்பு ஒன்றை பசுபிக் சமுத்திரப் பகுதியில் பரீட்சிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இடமபெற்ற சுனாமி அனர்த்தம் போன்ற இயற்கைப் பேரழிவு ஒன்றும் மீண்டும் ஏற்படுமாயின் அதிலிருந்து உயிர்களை பாதுகாத்துக் கொள்வதற்கு இந்த ஒழுங்குமுறை பாரிய பங்களிப்பை வழங்கும் என்று தெரிவிக்கப் படுகிறது.

கடற்பரப்பினுள் நிறுவப்படும் எச்சரிக்கை உபகரணங்கள் கண்காணிப்பு மத்திய நிலையங்களுடன் தொடர்புபடுத்தப்படுவதுடன் அவசர சேவைகளுடனும் இணைக்கப்பட்டிருக்கும்.

இந்த திட்டத்தின் அடிப்படையில் இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள சகல நாடுகளும் தனித்தனியாக முன்னெச்சரிக்கை கட்டமைப்பை நிறுவும் என்றும் இந்த தனித்தனி கட்டமைப்புக்கள் வலைபின்னல் ஊடாக ஒருங்கிணைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

டிசம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலையினால இலங்கை, இந்தியா இந்தோனேசியா உட்பட 13 நாடுகளில் இரண்டு இலட்சதத்துக்கு மேற்பட்டோர் உயிரிந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# சர்வதேச ஆயுத எதிர்ப்பு தினத்தில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் அழிப்பு

(கொழும்பு)

பல்வேறு நபர்களிடமிருந்து கைப்பற்றப் பட்ட 27ஆயிரத்திற்கு அதிகமான துப்பாக்கிகளை அழிக்க தீர்மானித்துள்ளதாக மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச ஆயுத எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு இந்த ஆயுதங்கள் அழிக்கப்படவுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் சந்திர எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ரொரிங்டன் சதுக்கத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி இந்த ஆயுதங்கள் அழிக்கபபடவுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பாதுகாப்பு பிரிவினரினால் இந்த ஆயுதங்கள கைப்பற்றப்பட்டதாக எக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இவ ஆயுதங்கள் கொலை, கொள்ளைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம வழங்கிய பொதுமன்னிப்பு காலத்தில் கிடைக்கப்பெற்ற ஆயுதங்களும் இதில் அடங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# மகோற்சவம்

அராலி - வண்ணப்புரம் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேதவிஸ்வநாதேஸ்வரர் தேவஸ்தான மகோற்சவ பெருந் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவிருக்கும் மகோற்சவத்தில், எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ரதோற்சவத் திருவிழாவும் மறுநாள் 12 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவ திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (அ-49)

# பிரம்மோற்சவம்

கிழக்கு இலங்கையில் சரித்திரப் பிரசித்த பெற்ற ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய வருடாந்த பிரமோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு மகோற்சவம் நடைபெற்று 12 ஆம் திகதி ஆனி உத்தரத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இரவு கொடியிறக்கமும் நடைபெறும்.

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் பிரமோற்சவம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

# கரும்புலிகள் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கவிதைப் போட்டி பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடாத்தும் கரும்புலிகள் நாள் நிகழ்வும் பரிசளிப்பும் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு சர்வதேச தமிழீழமாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் செ.செல்வகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன், யாழ்.மாவட்ட துணை அரசியல் துறை பொறுப்பாளர் ந.கண்ணன் மற்றும் யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர்சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர் பேரவையினால் கரும்புலிகள் நாளை ஒட்டி நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

கவிதைப்போட்டி பெறுபேறுகளின் விபரம் வருமாறு,

1ஆம் இடம் **'மெள்ளவேபிறக்கும் ஈழம்'** தம்பிராசா பரமலிங்கம் (வண் வடமேற்கு)

2ஆம் இடம் **'தனியொருவனல்ல'** எம்.சந்திரகாந்தா (12, 32வது ஒழுங்கை வெள்ளவத்தை)

3ஆம் இடம் **'நாளைய விடியல் எமக்காக'** சி.அகிலன் (அண்ணா சிலையடி கரணவாய்)

*பாராட்டுப் .பெறுவோர் (சான்றிதழ் பெறுவோர்)*

**'அன்பான உறவுகளுக்கு'**
பா.சஞ்சீவன் (கனகாம்பிகைக் குளம் அ.த.க.கிளிநொச்சி)

**'கறுப்புடை தரித்த நிழல்களால்'**
என்.பிறேம்சீலன் (கோண்டாவில் வடக்கு)

**'என் முற்றத்துப் பூவரசு'**
பா.தீபச்செல்வன் (முதலாம் வருடம் கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

**'திசைகளில் பறக்கும் தென்றல்கள்'**
தமிழீழ கவிராயர் (பருத்தித்துறை வீதி நல்லூர்)

**'தமிழ்த்தேசம் படைத்திடுவோம்'**
ஆ.சவரிப்பிள்ளை (மாரீசன்) (ஊற்றுப்புலம் கிளிநொச்சி)

**'தேசவிடுதலைககாக'**
ப.பத்மன் (யாழ்/மல்லாகம் மகாவித்தியாலயம்)

**'விடியலை நோக்கி விரைந்திடுவோம்'**
திருமதி மாலாதேவி மதிவதனன் (அளவெட்டி மத்தி)

**'விடியலுக்காக விரைந்தவர்'**
ப.சந்திரகலா (உரும்பிராய்)

**'கனக்கும் நெஞ்சு'**
கா.சுஜோ (போராளி) (பொன்னம்பலம் மருத்துவமனை கிளிநொச்சி)

**'எம்மணணை மீட்ட கரும்புலிகள்'**
கவிஞர் செ.பரமநாதன் (தாவடி)

**'வரலாறு உம்மை நினைக்கும்'**
வைஸ்ணவி ஏழுமலை (நிமலன் புகைப் படக்கலையகம் மல்லாவி)

**'பூசிக்கப்பட வேண்டியவர்கள்'**
சி.விஸ்வராஜ் (கோட்டைக்கல்லாறு மட்டக்களப்பு)

**'மீள்வோம் மீட்டெடுப்போம்'**
வைத்தியர் ச.முருகானந்தன் (அரசினர் வைத்தியசாலை முழங்காவில்)

**'தேசவிடுதலை'**
சற் அல்ஸிபாத் (35 ரதீமல்யாய புத்தளம்)

**'காற்று தவம்'**
செல்வி காயத்திரி இராஜேஸ்வரன் (விவசாயபீடம் யாழ்.பல்கலைக்கழகம்)(ற)

## இன்று ஒரு தகவல்

# நால்வகை மனிதர்கள்

இந்த சமுதாயத்தில் உள்ள மக்களை நான்கு வகையாக பிரிக்கலாம் என்று ஒரு பெரியவர் சொல்கிறார். நல்லதையே செய்பவர்கள் முதல் ரகம். அவர்களை மேன்மக்கள் என்று சொல்லலாம். இவர்கள் எல்லாம் எப்படிப்பட்டவர்கள் என்றால் "நாம் கஷ்டப்பட்டாலும் சரி அடுத்தவர்கள் நன்றாக இருக்க வேண்டும்" என்று நினைப்பவர்கள். வாழ்க்கையை பொதுப் பணிக்கு அர்ப்பணிக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் எல்லாம் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் கிடைத்துவிட்டால் மக்கள் அதிஷ்டசாலிகள்.

ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார் ஒருவர். இன்னொருவர் பக்கத்தில் இடம் இல்லாமல் நின்று கொண்டே வருகிறார். இவர் பார்க்கிறார். 'சார்! நீங்கள் உட்காருங்கள்' என்று கூறி அவரைத் தன் சீற்றில் உட்கார வைத்துவிட்டு இவர் நின்று கொண்டு வருகிறார். இவரைப் பார்த்தால் நமது கண்ணுக்கு ஏமாளியாகத் தெரியலாம். ஆனால் இதுபோன்ற குணம் உடையவர்கள் எல்லாம் மேன் மக்கள். நான் கூறிய முதல் ரகம்.

சரி! அடுத்தது இரண்டாவது ரக மனிதர்கள் இவர்களைப் பொதுவாக நல்லவர்கள் என்று கூறலாம். இவர்கள் எப்படி என்றால் நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். அடுத்தவர்களுக்குக் கெடுதல் செய்யமாட்டார்கள். இருந்தாலும் அடுத்தவர்கள் நலமாக இருக்கவேண்டும் என்பதற்காக தன்னுடைய நலனை விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கமாட்டார்கள்.

பஸ்ஸில் ஒரு சீற்றில் இரண்டாவது ரக ஆள் உட்கார்ந்திருக்கிறார். இன்னொருவர் நின்றுகொண்டே பிரயாணம் செய்கிறார். சீற் கிடைக்காமல் நமது ஆள் நிற்பவருக்காக பரிதாபப்படுவாரே தவிர எழுந்து அவரை உட்கார வைத்துவிட்டு தான் நின்று கொண்டுவர மாட்டார். "அந்த அளவுக்கு நான் தியாகி இல்லை" என்று கூறிவிடுவார். இவர்கள் இரண்டாவது ரகம்.

மூன்றாவது ரகம் எப்படித் தெரியுமா? சொந்த நலனுக்காக அடுத்தவர்களின் நலனைக் கெடுப்பதற்கும் துணிந்து விடுவார்கள். ஏற்கனவே பஸ்ஸில் சீற்றில் வேறு ஒருவன் துண்டு போட்டு வைத்திருந்தாலும் அதைத் தூக்கி யாருக்கும் தெரியாமல் ஜன்னல் வழியாக வெளியே எறிந்துவிட்டு அந்த இடத்தில் நல்லபிள்ளை மாதிரி இவர் உட்கார்ந்திருப்பார்.துண்டு போட்டவர் வந்து கேட்டால் "துண்டா? நான் பார்க்கவில்லையே" என்பார். இது மூன்றாவது ரகம்.

நான்காவது ரகம் எப்படி என்றால் தனக்கு எந்த நலனும் இல்லாவிட்டாலும் கூட அடுத்தவர்களுக்கு ஏதாவது தீமை செய்து கொண்டே இருப்பார்கள் அதில் ஒரு சுவாரஷ்யம். இவர் பஸ்ஸில் உட்கார்ந்திருப்பார். பக்கத்து சீற்றில் ஒருவர் துண்டுபோட்டு விட்டுப்போயிருப்பார். இவர் அந்தத் துண்டை எடுத்து சத்தம் போடாமல் வெளியே போட்டுவிட்டு கம் என்று இருப்பார். வேறு ஒருவர் வந்து "சார்... இடம் காலியா? உட்காரலாமா?" என்பார். "உட்காருங்களேன்" என்பார் இவர். அதன் பின்பு துண்டுபோட்டவர் வருவார். இரண்டு பேருக்கும் சண்டை வந்துவிடும். நமது ஆள் அதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருப்பார். இவர் நான்காவது ரகம். ஆக இப்படி நால்வகை மக்கள்.

இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் முதல் ரகம் என்று சொன்னேனே அவர்களும் நமது நாட்டில் குறைவுதான். மூன்றாவது, நான்காவது ரகம் சொன்னேனே அவர்களும் நாட்டில் குறைவுதான். இரண்டாவது ரகம் சொன்னேனே அதாவது நல்லவர்கள் இருந்தாலும் அடுத்தவர்களின் நலனுக்காக தன்னுடைய நலனை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாதவர்கள் அப்படிப்பட்டவர்கள் தான் சமுதாயத்தில் மிகவும் அதிகம்.

ஒரு சமுதாயத்தில் முதல் ரகமும்,இரண்டாவது ரகமும் எவ்வளவுக்கு அதிகமோ அவ்வளவுக்கு அந்த சமுதாயம் நன்றாக இருக்கும். நமது நாடு சுதந்திரமடைந்த சமயத்தில் முதல் ரகமும் இரண்டாவது ரகமும் அதிகமாக இருந்தது. இப்போது நான்காவது ரகம் அதிகமாய் இருப்பது போல் தெரிகிறது. இந்த நிலை மாறவேண்டும் என்றால் முதல் ரகமான மனிதர்களை நாம் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சரி ... முதல் ரகமா, மூன்றாவது ரகமா என்று எப்படிக் கண்டு பிடிப்பது? அவர்களுக்கு என்ன முகத்தில் அப்படி எழுதியா ஒட்டியிருக்கும்? நாம் தான் அதை சாமர்த்தியமாகக் கண்டு பிடிக்க வேண்டும். வாக்குக் கேட்கும் முறையை வைத்துக் கூட அவர்கள் எந்த ரகம் என்பதை ஓரளவுக்கு கண்டுபிடிக்கலாம்.

ஒருத்தர் அப்படித்தான் வாக்குக் கேட்க வந்தார். அவர் வாக்குக் கேட்கும் முறையே தனி. அவர் எப்படி என்றால் ஒவ்வொரு வீடாகப்போவார். அந்தந்த வீட்டில் இருப்பவர் என்ன செய்கிறாரோ அதே வேலையை இவரும் செய்வார். இப்படிச் செய்துகொண்டே வாக்குக்கேட்பார். அதே மாதிரி ஒருவீட்டுக்குப்போனார் இவர். போன நேரம் அந்த வீட்டுத் தோட்டத்தில் ஒருவர் கொத்திக்கொண்டிருந்தார். இவர் உடனே போய் தானும் இன்னொரு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு அவருக்குப் பக்கத்திலேயே கொத்த ஆரம்பித்தார். நெற்றி வியர்வை நிலத்தில் விழ கொஞ்சநேரம் கொத்தினார். அதன் பின் மெதுவாகப் பேசஆரம்பித்தார்.

"நான் தேர்தலில் நிற்கிறேன். உங்கள் வாக்கை எனக்குப் போடவேண்டும்" என்றார். "அது முடியாத காரியம்" என்றார் அவர். "ஏன் ?" என்று கேட்டார் இவர். "ஏனென்றால் நான் இந்த வீட்டுக்காரன் இல்லை. நானும் உங்களை மாதிரி வாக்குக் கேட்டுவந்தவன் தான். அதுதான் கொத்திக் கொண்டிருக்கிறேன் "என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டி
# அம்பாறை இரு அணிகளும் வெற்றி

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாவட்டங்களுக்கிடையிலான மாகாண மட்ட ஆண்,பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி யூன் மாதம் 29ஆம் திகதியும் 30ஆம் திகதியும் மட்டுவில் வளர்மதி விளையாட்டரங்கில் நடைபெற்றது.

நடைபெற்ற இப்போட்டிகளில் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் அம்பாறை மாவட்ட அணி வெற்றி பெற்றுள்ளது.

ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி விளையாடிய போட்டியில் வவுனியா மாவட்ட அணியும்,கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி விளையாடிய போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியும், மட்டக்களப்பு மாவட்ட அணியை எதிர்த்து அம்பாறை அணி விளையாடிய போட்டியில் அம்பாறை அணியும் வெற்றிபெற்றன.

திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி விளையாட இருந்த வேளை திருகோணமலை மாவட்ட அணி சமுகம் தராததால் யாழ். மாவட்ட அணிக்கு வெற்றி கொடுக்கப்பட்டது. பின்னர் அரையிறுதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணிக்கும் வவுனியா மாவட்ட அணிக்கும் இடையில் நடந்த போட்டியில் யாழ். மாவட்ட அணியும், கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து அம்பாறை மாவட்ட அணி மோதி அம்பாறை மாவட்ட அணியும் வெற்றி பெற்றன.தொடர்ந்து நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணியும் அம்பாறை மாவட்ட அணியும் விளையாடி அம்பாறை மாவட்ட அணி யாழ். மாவட்ட அணியை வென்றது.

இதேவேளை, மூன்றாம் இடத்திற்காக வவுனியா மாவட்ட அணி கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து விளையாடிய போட்டியில் வவுனியா மாவட்ட அணி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று பெண்கள் பிரிவில் திருகோணமலை மாவட்ட அணி, முல்லைத்தீவு மாவட்ட அணி, கிளிநொச்சி மாவட்ட அணி ஆகிய மூன்று அணிகளும் கலந்துகொள்ளவில்லை. இதனால் இறுதிச் சுற்றில் அம்பாறை மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் விளையாடி அம்பாறை மாவட்ட அணி வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை, மூன்றாம் இடத்திற்காக யாழ். மாவட்ட அணியும் மட்டக்களப்பு மாவட்ட அணியும் எதிர்த்து விளையாடி யாழ். மாவட்ட அணி வெற்றிபெற்றுள்ளது. (அ-19)

# உள சமூக சேவை நிறுவனப் பதிவு

(யாழ்ப்பாணம்)

உள சமூக சேவையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் மாகாண சுகாதாரசேவை பிரதிப்பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணத்துடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு தங்களது நிறுவனத்தைப் பதிவு செய்து கொள்ளுமாறு சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

அத்துடன் நிறுவனத்தில் பணியாற்றும் உள சமூக சேவையாளர்களுக்கு அடையாள அட்டை மாகாண சுகாதார பிரதிப்பணிப்பாளர் பணிமனையினால் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (அ)

# காத்திருப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பாலாவி, தவசிக்குளம், வரணி, எழுதுமட்டுவாள்,கெற்பேலி, மிருசுவில்,ஆகிய கிராமங்களுக்கு மின் விநியோகத்தினை செய்து தர நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

மேற்படி கிராமங்களில் இருக்கும் பல வீடுகளுக்கு வீட்டு உரிமையாளர்கள் உள்ளக மின் பொருத்தும் வேலைகளைப் பூர்த்தி செய்துள்ள நிலையில், மின் இணைப்பு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம் வீடுகளுக்கான மின் இணைப்பு களை வழங்குவதற்கு இலங்கை மின்சாரசபையிடம் போதிய வயர்கள் மற்றும் மின்மாணிகள் கைவசம் இல்லாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (அ-16)

# பரு. ஆதார வைத்தியசாலையை
# மாவட்ட பொது வைத்தியசாலையாக
# தரமுயர்த்த அபிவிருத்திக்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாவது பெரிய வைத்தியசாலையாக விளங்கிவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை மாவட்ட பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தி அதன் சேவைகளை விஸ்தரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு கொழும்பில் உள்ள சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேற்படி வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் தலைவர் டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளையும் செயலாளர் வீ.ஜீ.தங்கவேலும் இணைந்து கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து 35 கிலோமீற்றர் தொலைவுக்கு அப்பால் இருப்பதால் விசேட மருத்துவ சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அங்கு செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையானது தரமுயர்த்தப்பட்டால் இப்பிரதேசத்து பொதுமக்கள் தமக்கான விசேட மருத்துவ சேவையை இங்கு பெறக்கூடியதாக இருக்கும்.

மேலும் இங்கு முன்பு நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக 1970ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இருந்த வசதிகள், வாய்ப்புகளும்,மருத்துவ நிபுணர்களின் வருகையும் இல்லாமல் போயின.

இப்போது இயல்பு வாழ்வு திரும்பிக் கொண்டிருப்பதால் மாவட்டத்தில் உள்ள ஏனைய திணைக்களங்கள் தமது செயற்பாடுகளை துரிதகதியில் விஸ்தரித்துக் கொண்டிருக்கும் வேளையில் சுகாதார திணைக்களம் மட்டும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை துரிதப்படுத்தாமல் இருப்பது வேதனைக்குரியதாகும்.

அத்தோடு எமது ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் திருப்திகரமானதாக இருக்காமையினால் நோயாளர்கள் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையை நாடிச்செல்கின்றனர்.

மேலும் கடந்த 5ஆண்டுகால சேவைகளை நாம் அலசிப்பார்க்கும் போது இவ் வைத்தியசாலையின் சேவைகள் வருடத்திற்கு வருடம் தாழ்ந்துகொண்டு போனமையே வரலாறாகும்.

எனவே வடமராட்சி பிரதேசத்தில் வாழ்கின்ற சுமார் ஒன்றரை இலட்ச மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு இவ் வைத்தியசாலையை மாவட்ட பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தித் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இம் மகஜரின் பிரதிகள் சுகாதார அமைச்சர், வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆளுநர்,பிரதம செயலாளர், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர் உட்பட பல்வேறு தரப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-16)

# ஆழிப்பேரலையால் பாதுகாப்பு வலயத்தினுள்ளும் பாதிப்பு
# இருப்பினும் புலிகள் உட்செல்ல இராணுவம் எதிர்ப்பு
## இராணுவ உயர் அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரணசபை உடன்படிக்கை மூலம் கடற்கரையில் இருந்து 2கிலோமீற்றர் தூரத்திற்கான நிர்வாகம் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டாலும் அதில் உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் விலகாது என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் சில பிரதேசங்களும் பாதிக்கப்பட்டன. எனினும் அந்தப் பிரதேசங்களுக்கு செல்லவோ ஆழிப்பேரலை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடவோ இராணுவம் இடமளிக்காது என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதையடுத்து வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என வலியுறுத்தி எதிர்வரும் யூலை மாதம் 10ஆம் திகதி முதல் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்த விடுதலைப்புலிகள் திட்டமிட்டு வருகின்றனர்.

காரைநகர் கடற்படை முகாம் பிரதேசத்திற்கோ, திருமலை துறைமுக பிரதேசத்திற்கோ விடுதலைப் புலிகள் நுழைய நாம் அனுமதிக்கமாட்டோம். இடம் பெயர்ந்த பிரதேசங்களுக்கு மட்டுமே பொதுக்கட்டமைப்பு செயற்படுத்தப்படும்.

இதற்கு முன்னரும் இந்திய மற்றும் தென்னாபிரிக்க பாதுகாப்பு வல்லுனர்களைக் கொண்டுவந்து அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து விலக வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்ட போதிலும் இராணுவம் அதற்கு இணங்கவில்லை என அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-4)

**இணையப் பார்வை**

# செயல் திறனோடு செயற்படுத்தப்படுமா பொதுக்கட்டமைப்பு?

'கடற்கோள் நிவாரணப் பொதுக் கட்டமைப்புக்கான' புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் கடந்த 24ஆம் திகதி கைச்சாத் திட்டிருக்கிறார்கள். இந்த உடன்படிக்கையினை கனடா, நோர்வே,



இந்தியா ஆகிய நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் வரவேற்றுள்ளன.

மேற்குலக நாடுகள் இது குறித்துத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து வருகின்றன. சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 'கொள்கை அடிப்படையில்' தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. ஜனதா விமுக்தி பெரமுனவும் மற்றைய சிங்கள-பௌத்த பேரினவாதக் கட்சிகளும் இந்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து சுமார் ஆறுமாத காலத்திற்குப் பின்னர் எத்தனையோ வீண் விவாதங்கள், வீம்புப் பேச்சுக்களின் பின்னர் ஒரு வழியாக சந்திரிகா அரசு இந்த உடன்படிக்கையை ஒப்பேற்றி



பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தேசிய பிக்குமுன்னணி நடத்திய சத்தியாக்கிரகம்

உள்ளது.

'கடற்கோள் நிவாரணப் பொதுக் கட்டமைப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையில்' கைச்சாத்திட்டதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மேலும் ஓர் அங்கீகாரம் கிடைத்திருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் உட்படப் பலரும் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இப்பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள ஜே.வி.பி மற்றும் புத்த பிக்குகள் போன்றோரும் விடுதலைப் புலிகளுக்கு கிடைத்த இந்த அங்கீகாரத்தைத்தான் தமது எதிர்ப்புக்கு காரணமாக சுட்டிக்காட்டி வருகின்றார்க்ள் பொதுவாக-பரவலாக-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மேலுமொரு அங்கீகாரம் கிடைத்துள்ளதாகத்தான் சர்வதேச ஊடகங்களும் கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

**அங்கீகாரம்**

'பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்துள்ள இன்னுமொரு அங்கீகாரமா?' இந்த விடயத்தை வேறு ஒரு கோணத்தில், வேறு ஒரு தளத்தில் வைத்துத் தர்க்கித்தால் 'அங்கீகாரம்' என்ற தேவையைப் பெறுவதற்கான கட்டத்தையும், காலத்தையும் விடுதலைப் புலிகள் கடந்து வந்து விட்டார்கள். சரியாக சொல்லப் போனால் விடுதலைப் புலிகள்தான் இங்கே ஓர் அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்றார்கள்.

முழுமையான இலங்கைத் தீவிற்கும் பொருளாதார உதவி கிடைக்க வேண்டுமென்றால் அதற்கு விடுதலைப் புலிகளின் ஒத்திசைவும், அங்கீகாரமும், கைச்சாத்தும் இந்த உடன்படிக்கைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்டிருந்தது. அதனையே உலக நாடுகளும், நிதி உதவி வழங்கும் நாடுகளும் வலியுறுத்தி வந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் அங்கீகாரத்தை வெளிப்படுத்திய அவர்களது கைச்சாத்தின் மூலம்-சிறிலங்காவையும் தமிழீழத்தையும் உள்ளடக்கிய முழு இலங்கைத் தீவிற்கும் இன்று சுனாமிப் பேரழிவுக்கான நிதி உதவி கிடைக்கவிருக்கின்றது என்பதே யதார்த்தமான நிலையாகும். இது விடுதலைப் புலிகளுக்கான அங்கீகாரமல்ல! விடுதலைப்புலிகள் கொடுத்துள்ள அங்கீகாரம்! உண்மையிது! வெறும் புகழ்ச்சியல்ல!!

**ரணில்-சந்திரிகா**

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் 23-02-2002 அன்று சிறிலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் போர் நிறுத்தம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இன்றுவரை அமுலில்-நடைமுறையில் இருக்கும்-இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை, ஜனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் விமர்சித்து வந்ததோடு, இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் சட்டபூர்வமானதா? என்றும் கேள்வி எழுப்பி வந்துள்ளார். தான் நினைத்தால் இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்துவிட முடியும். என்றும் சந்திரிகா எச்சரிக்கை செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் சந்திரிகாவின் இன்றைய அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திட்ட பொதுக் கட்டமைப்புப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்துக்களில் ஒன்று என்ன கூறுகின்றது? சரத்து இரண்டின் ஆறாவது பிரிவு இவ்வாறு கூறுகின்றது:

**"இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமான 23-02-2002 எனத் திகதியிட்ட போர் நிறுத்த உடன்படிக்கை குழு வலுவுடனும் பயன் உறுதியுடனும் தொடர்ந்திருக்க வேண்டும் என்பதுடன் இந்த சுனாமிப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள எதுவும் அத்தகைய உடன்படிக்கையை பங்கப் படுத்துவதாகவோ அல்லது அதன் நியதிகளை ஏதேனும் விதத்தில் மாற்றுவதாகவோ பொருள் கொள்ளப்படலாகாது.!"**

அதாவது சந்திரிகாவின் தற்போதைய அரசு அன்றைய போர் நிறுத்த உடன்படிக்கையைச் சட்டபூர்வமாக இன்று ஏற்றுக் கொண்டுள்ளதோடு மட்டுமல்லாது, 'அந்தப் போர் நிறுத்த உடன்படிக்கைக்குப் பங்கம் ஏற்படுத்த மாட்டோம்' என்றும் 'அதன் நியதிகளை மாற்ற மாட்டோம்' என்றும் உறுதி அளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.



இந்தப் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கை மிகச் சரியான முறையில் செயல்படுத்தப்படுவதற்கு சந்திரிகா அரசு தடைக்கல்லாக இருக்காமல், இன்னுமொரு முக்கியமான விடயம் நிருபிக்கப் படக்கூடிய வாய்ப்பு உண்டு.

**நிதி கையாள்தல்-செயல்திறன்**

'கடற்கோள் நிவாரணப் பொதுக்கட்டமைப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையின்' பின்னர் நிதி உதவி வழங்கும் உலக நாடுகள் முதல் கட்ட நிதியை வழங்கிய பின்னர் அந்த நிதியை இந்த இரண்டு தரப்பினரும் - அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும்,- எவ்வாறு நிர்வகித்து நிவாரணத்தையும், புனர்வாழ்வையும், அபிவிருத்தியையும் தத்தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு வழங்குவார்கள் என்பதை சம்பந்தப்பட்ட உலக நாட்டுப் பிரதிநிதிகள் கண்காணிப்பார்கள்,

நிர்வாக ஓப்பீட்டளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், சிறிலங்கா அரசிற்கும் இடையே நிர்வாகக் கட்டமைப்பிலும், செயல்திறனிலும் உள்ள ஏற்றத் தாழ்வை நிதியுதவி வழங்கும் நாடுகள் உணருகின்ற காலம் வெகு தொலைவில் இல்லை.

முஸ்லிம் சமுகத்தினர் செறிந்து வாழும் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பாரபட்சமற்ற நியாயமான திறன் மிக்க செயற்பாடுகள் காரணமாக கசப்புணர்ச்சி மறைந்து நல்லுறவு பெருகுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பிரித்தாளும் தந்திரத்தை உபயோகிப்பவர்களும், பிரதேச வாதம் பேசுபவர்களும் தமது விசமச் செயல்பாடுகளைக் கைவிட வேண்டும்.

போர்க்காலங்களின் போது தமிழீழக் கரையோரப் பகுதி மக்கள் விடுதலைக்காக அளித்த பங்கும், கொடுத்த விலையும் அளப்பரியது. அத்தோடு கடற்கோள் அனர்த்தத்தினால் அவர்கள் அடைந்த இழப்பும், இன்னலும் அளவிட முடியாதவை.

**பாதிப்புற்ற அனைத்து மக்களுக்கும் தேவையான அவசர மனிதாபிமான உதவிகளைச் செய்து அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய ஆறு மாவட்டங்களிலுள்ள கரையோரச் சமுதாயங்களுக்குத் துரிதமான நிவாரணத்தையும், புனர்வாழ்வையும், புனரமைப்பையும், அபிவிருத்தியையும் வழங்குவதற்கும் அத்துடன் பாதிக்கப்பட்ட இடப்பரப்புக்களை மீளக்கட்டியெழுப்பும் நடைமுறைகளுக்கு வசதியளிப்பதற்கும் அதனைத் துரிதப்படுத்துவதற்குமென இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளும் நல்லெண்ணத்துடனும் அவற்றின் முனைப்பான முயற்சிகளைப் பயன் படுத்தியும் ஒருமித்துச் செயலாற்றத் தீர்மானித்தும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளன என்று இந்தக் கடற்கோளின் நிவாரணப் பொதுக் கட்டமைப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையின் முகவுரையும் கூறுகின்றது.**

**ஜனாதிபதியின் நடவடிக்கை**

ஐந்து லட்சம் தமிழ் மக்களைத் தன்னுடைய பாரிய இராணுவ நடவடிக்கையால் ஓர் இரவிலேயே அகதிகளாக்கி இடம் பெயர வைத்த சந்திரிகா தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் தமிழ் மக்களைச் சொல்லொண்ணா இன்னல்களுக்கு உள்ளாக்கியவர்.

உணவு, மருந்து, பொருளாதாரத் தடைகள் மூலம் தமிழினத்திற்கு தொடர்ந்தும் துன்பத்தையே கொடுத்து வந்த சந்திரிகா இலங்கைத் தமிழர்கள் வந்தேறு குடிகள்தான்! என்று தென்னாபிரிக்காவில் பேட்டி கொடுத்த சந்திரிகா ரணில் அரசுடனான பேச்சுவார்த்தைகளின் போது சகல முட்டுக்கட்டைகளையும் போட முயன்ற சந்திரிகா நோர்வே நாட்டின் சமாதான அனுசரணையை அகற்ற முயன்ற சந்திரிக்கா இப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட சந்திரிகா மனம் மாறி திருந்தி விட்டாரா?


தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்குரிய வரைபை ரணில் விக்கிரமசிங்கவின் அன்றைய அரசிடம் கையளித்த உடனேயே ரணிலின் அரசிலிருந்த மூன்று முக்கிய அமைச்சுகளை சந்திரிகா கையகப்படுத்தினர்.

தொடர்ந்தும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக சந்திரிகா அம்மையார் தன் கருத்துக்களைத் தெரிவித்தே வந்திருந்தார். அதற்கிணங்க ரணில் விக்கிரம சிங்கவின் ஆட்சியைக் கலைத்து குறுகிய பெரும்பான்மைப் பலத்தில் நாடாளுமன்றத்தையும் அவர் கைப்பற்றினார். இப்பொழுது சுனாமிப் பேரழிவு நடந்த ஆறு மாதங்களுக்குப் பின்னர் எத்தனையோ இழுத்தடிப்புக்குப் பின்னர், இழுபறிகளுக்கு பின்னர் சர்வதேச அழுத்தம் காரணமாக பொதுக் கட்டமைப்பினை உருவாக்க வேண்டிய கட்டாயத்தின் பேரில் சந்திரிகா இறங்கி வந்திருக்கின்றார்.

இப்பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையில் சில முக்கிய விடயங்கள் முழுமையான வரைவுகளைக் கொண்டிருக்கவில்லை. என்றும் சில அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். நிதி விநியோகம் மற்றும் கையாள்கை முறை தொடர்பான இணக்க ஏற்பாடு இனிமேல்தான் காணப்பட வேண்டும்.

இந்த இணக்கப்பாட்டைக் காண்பதற்குரிய காலத்தையும் அரசு இழுத்தடிக்கக் கூடும்.

கால இழுத் தடிப்புக்குரிய வாய்ப்பு பன்முகப்பட்ட நிலையற்ற அரசியல் காலம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சிங்கள பௌத்த பேரினவாதம் அரசை எந்தவிதமாவது கைப்பற்றுவதிலேயே குறியாக இருக்கும் சுயநலக் கட்சி அரசியல் வாதம் - இவற்றிற்கிடையே இப்பொதுக் கட்டமைப்பு செயல் திறனோடு செயல்படவாய்ப்பிருக்கின்றதா?- என்ற கேள்வியும் பெரிதாக எழுகிறது. □



# காற்றுள்ளவரை

## திரை விமர்சனம்

'உயர்ந்த நிலையில் இருந்தாலும் உதவி செய்தவர்களை மறக்கக் கூடாது' என்பது கதையின் கருத்து.

தாயின் மருத்துவச் செலவை சமாளிப்பதற்காக நடிகை ஆகிறார் நர்மதா.

பாடகர் ஆகும் ஆசையில் சென்னை வரும் வசதி படைத்த வாலிபன் பாலா அவளைச் சந்திக்கிறான். பணப் பிரச்சினை காரணமாக நர்மதா நடிக்கும் படத்தை வெளியிட முடியாத நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலையில் பாலா தனது சொத்தை விற்று படத்தை வெளியிட ஏற்பாடு செய்கிறான்.

இதற்கிடையே நடிகை நர்மதாவை கொலை செய்ய சதி நடக்கிறது. பாலா அதைத் தடுக்கிறான். எதிரிகளுடன் மோதும் போது நடந்த விபரீத நிகழ்ச்சியில் நடிகை நர்மதாவுக்கு பழைய சம்பவங்கள் மறந்து விடுகின்றன. பாலா திக்குவாய் ஆகிவிடுகிறான்.

சொத்தை இழந்து, தகுதியையும் இழந்த பாலாவுக்கு நடிகையின் தந்தை ஆதரவு கொடுக்கிறார். ஆனால் அவனை நடிகை வெறுக்கிறாள். பாலா செய்த தியாகத்துக்குப் பலன் கிடைத்ததா? நர்மதாவுடன் அவன் இணைந்தானா...? என்பது கிளைமாக்ஸ்.

நடிகையின் வளர்ச்சிக்காக தியாகம் செய்யும் இளைஞன் பாலாவாக வரும் ஜெய் ஆகாஷ் கிடைத்த வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்தியிருக்கிறார். ஒவ்வொரு முறையும் பிரணதி அவரை அவமானப்படுத்தும் போது அதைத் தாங்கிக்கொண்டு தவிக்கும் காட்சிகளில் ஜெயித்திருக்கிறார்.



உச்ச நிலையில் இருக்கும் ஒரு நடிகை எப்படி நடந்து கொள்வார் அவரது ஆசாபாசங்கள் எப்படிப் பட்டவை என்பதை யதார்த்தமாகக் காட்டியிருக்கிறார் பிரணதி. வாட்சுமேனாக வந்து அட்டகாசப்படுத்தும் வடிவேலு, வெண்ணிற ஆடை மூர்த்தி, ஆர்த்தி கூட்டணிக்கு ஒரு 'சபாஷ்' போடலாம்.

நடிகையின் ரசிகனாக வரும் சுரேஷ் இரண்டு ஆட்டம் போடுகிறார். ராஜேஷ், ராஜீவ், ஆர்.சுந்தர்ராஜன், பாண்டு, விஜிகிட்டி, கசன் கான் ஆகியோரும் காற்றுக்கு வடிவம் கொடுத்திருக்கிறார்கள்.

பரணியின் இசை பாடல்களுக்கு பரபரப்பான இடத்தைப் பிடித்துக்கொடுக்கலாம்.. கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுள்ள ராதாபாரதி காட்சிகளைத் தொய்வு இல்லாமல் கொண்டு போய் இருக்கிறார். கதைக்கு இன்னும் கொஞ்சம் அழுத்தம் கொடுத்திருக்கலாம்.

**தென்றல் காற்று**

## ஷங்கரைப் பயமுறுத்திய பாட்டு

'அந்நியன்' படத்தில் வரும் 'குமாரி...' பாடல் க்ளிக் ஆகுமா? என எனக்குச் சந்தேகமாக இருந்தது என்கிறார் ஷங்கர். மெதுவான ரிதத்தில் வரும் அப்பாடலை வெளிநாட்டில் படமாக்கியிருக்கிறார் ஷங்கர். இதனால்தான் பயம் வந்துவிட்டது எனக் கூறும் ஷங்கர், ஓடியோ விற்பனைக்கு வந்தபின் அனைவரும் அந்தப் பாடலைத்தான் நன்றாக இருப்பதாகக் கூறுகிறார்கள் என்கிறார்.



'தாஸ்'
ஜெயம் ரவி - ரேஹாமேனன்

# உச்ச சம்பளம் வாங்கும் த்ரிஷா



நடிகை த்ரிஷா தெலுங்குப் பட உலகில் கொடி கட்டிப் பறக்கிறார். அங்கு ஏராளமான படங்கள் கைவசம் உள்ளதால் தமிழ்ப் படங்களில் நடிக்கவில்லை. தமிழில் விஜய்யுடன் 'புலி' படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகி இருக்கிறார்.

அதுவும் 'சிவகாசி'யில் அவர் நடித்து முடித்த பிறகுதான் கால்ஷீட. புதிய படங்களில் நடிக்க வேண்டும் என்று கால்ஷீட் கேட்டு போகிறவர்கள், அவர் சொல்லும் சம்பளத்தைக் கேட்டு கதிகலங்கி நிற்கிறார்களாம்.

அது 45 லகரம் என்று கோடம்பாக்கம் வட்டாரம் கூறுகிறது.

பார்த்திபன் நடிக்கும் 'பைசா' படத்தில் அவரது ஜோடி லட்சுமிராய்.

* * *

**வின்சென்ட் அசோகன் 'அழகு நிலையம்' படத்தில் அரசியல் வாதியாக நடிக்கிறார்.**

## சினிமாச் சிதறல்

முடி...

'க...
வரை ...
தால் ...
நடிக்...
புதிய ...
இந்தப்...
எதிர்ப...
தனது...
நீளமா...
அ...
காமல்...
காணப்...
னம் செ...
செல்...
நேரில்...
இந்த '...
என்பதி...
ராம்.

# எதற்கும் த...

'ஜெயம்' படத்தில் அறிமுகமா...
ஆரம்பத்தில் இந்தப் பூனையும் ப...
துமா? என்பது போல அதில் பாவாடை...
சேலை அணிந்து அடக்க ஒடுக்கமா...
தார்.

பின்னர் 'வர்ண ஜாலம்', 'எதிர்...
ளில் கவர்ச்சியை அதிகமாக்கினா...
யன்' படத்தில் எதற்கும் தயார் என...
அடுத்து மாதவனுடன் அவர் நடி...
சகி'யிலும் கவர்ச்சி, நெருக்கம் இ...
த்து இருக்கிறாராம்.

இப்போது தமிழ் ரசிகர்கள் ...
டது. இனி முக்கிய இடம் என்னை...
ஏற்கனவே முன்னணியில் நிற்...



'வல்லவன்'
சந்தியா



'கோடம்பாக்கம்'
நந்தா - தேஜாஸ்ரீ

# மன்சூரலிகான் இயக்கி, நடிக்கு...
# 'நூறாண்டு வாழ்க!'

ராஜ்கென்னடி படநிறுவனம் மூலம் 5வது படமாக 'நூறாண்டு வா...
படத்தை மன்சூரலிகான் தயாரிக்கிறார்.

'நூறாண்டு வாழ்க' படத்தில் கதாநாயகனாக நடித்து கதை, திரைக்க...
வசனம் எழுதி முதன்முறை இப்படத்தை இயக்கி டைரக்ஷனில் குதிக்கி...
படம் பற்றி மன்சூரிடம் கேட்டபோது,

ஆணுக்குப் பெண் சமம் என்பது சரியல்ல. ஆணைவிடப் பெண் மேல...
வள் என்பதே சரி.

ஆண்களை பூமியில் ஜனிப்பவள் பெண்தான். ஆனால் பெண்களில் ப...
பேருக்கு எட்டு பெண்களின் வாழ்க்கை சரியாக அமைவதில்லை. கோல...
பூக்கோலம் – மாக்கோலம் என பெண்களின் கைவண்ணத்தில் உருவாகி...
ஆனால் அவளின் வாழ்க்கை அலங்கோலமாக மாறுவது ஏன்?, எப்ப...
இதை அலசுவதுதான் 'நூறாண்டு வாழ்க' கதை என்றார்.

இந்தப் படத்தில் அலெக்ஸ், செந்தில், பாண்டு, காரைக்குடி விஷ...
லைலா, மதிஷா, சாதனா, பிரபல நாயகி சார்மிளா, மன்சூரின் குழந்தை ...
கான, துக்ளக் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

இந்தப் படத்திற்கு 'காதல்' பட ஜோஸ்வா இசையமைக்கிறார்.

'ஒரு கல்லூரியின் கதை' படத்தின் டைரக்டர் நந்தா பெரியசாமி இப்போது சோனியா அகர்வாலின் முழு ரசிகர் ஆகிவிட்டார். இந்தப் படத்தின் நாயகன் ஆர்யா இன்னொரு அஜீத் என்று புகழ்ந்து தள்ளு...கிறாராம் பெரியசாமி.

## ...வளர்க்கும் அஜீத்

...ாட் ·.·பாதர்' படத்தைப் பற்றி இது ...எந்தத் தகவலும் இல்லை என்ப... அடுத்து பாலா இயக்கத்தில் ...ும் 'நான் கடவுள்' படத்துக்காக ...அவதாரம் எடுத்துள்ளார் அஜீத். ...படத்தின் மூலம் திருப்புமுனையை ...ார்த்துக் காத்திருக்கும் அஜீத், ... தோள் பட்டையைத் தொடுமாறு ...க முடிவளர்த்திருக்கிறார்.

...வர் குறுந்தாடியையும் மழிக்... வித்தியாசமான தோற்றத்துடன் ...படுகிறார். முடி வளர்ப்பதில் கவ...லுத்தியதால் அலுவலகம் பக்கம் ...ாமல் இருக்கும் அவர், யாரையும் ... சந்தித்துப் பேசுவது இல்லை. ...கெட்டப்' யாருக்கும் தெரியக்கூடாது ...ில் உஷாராகச் செயல்படுகிறா...


## ...ாராக சதா



...ான சதா, ...ால் குடிக் ... தாவணி, ...ாக நடித் ...

...' படங்க...ார். 'அந்நி...ன்று தாராளம் காட்டியிருக்கிறார். ...த்து வெளிவர இருக்கும் 'ப்ரிய... ...ரண்டிலும் போட்டி போட்டு நடி...


...ஆதரவு எனக்குப் பெருகிவிட் ...த் தேடிவரும் என்கிறார் சதா. ...பவர்களைச் சமாளிப்பாரா...?



## சிம்பு படத்தில் மல்லிகா

கவர்ச்சி நடிப்பில் பிபாஷாவையே ஓரம் கட்டிய பாலிவுட் ரசிகர்களின் கனவுக் கன்னி மல்லிகா ஷெராவத்.

இவரைத் தனது அடுத்த படமான 'வுல்லவனி'ல் ஒரு பாடலில் நடிக்க கேட்டிருக்கிறார் சிம்பு. 'சச்சினி'ல் பிபாஷா நடித்திருந்தார். அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் மல்லிகாவை நடிக்க அழைத் திருக்கிறார் சிம்பு.



'சித்திரம் பேசுதடி'
பாவனா

## நவ்யாவுக்கு நற்சான்றிதழ்




தங்கர்பச்சானின் ஜோடியாக நடிக்க முன்னணி நடிகைகளை நெருங்கிய போது, யாரும் ஒப்புக் கொள்ளவில்லை. காரணம் 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' படத்தில அவருக்கு ஜோடியாக நடிப்பவர் 2 குழந்தைகளின் தாயாக வரவேண்டும்.

கடைசியாக நவ்யாநாயர் இதில் நடிக்க ஒப்புக்கொண்டார். கேரளாவில் இருந்து இறக்குமதியான இவரை, தங்கர்பச்சான் புகழ்ந்து தள்ளுகிறார்.

'சொன்னதைக் கேட்டு திறமையாக நடிக்கிறார். படம் முடிந்ததும் பாருங்கள் நவ்யா எங்கேயோ போய்வ'டுவார்' என்று அவா சவால் விடுகிறார். இதைக் கேள்விப்பட்ட முன்னணி நடிகைகள் வந்த வாய்ப்பைத் தவறவிட்டிருக்கக் கூடாதோ... என்று யோசிக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

## சசி படத்தில் பாக்யராஜ் மகன்

சசி இயக்கத்தில் 'டிஷ்யூம்' என்ற படத்தில் நடிக்கிறார் சந்தியா. இவருக்கு ஜோடியாகப் புதுமுகம் ஒருவரை தேர்வு செய்தார் சசி. அவர் மாடலிங்கில் இருந்தவர். இப்போது அந்த மாடல் இதில் நடிக்கவில்லை. பாக்யராஜின் மகனை ஹீரோவாக புக் செய்யத் திட்டமிட்டுள்ளார் சசி.



## எல்லா விஷயத்திலும் 10 வருஷ அனுபவ முதிர்ச்சி எனக்கு இருக்கு – சிம்பு



'மன்மதன்' வெற்றியைத் தொடர்ந்து சிம்பு அடுத்து அடியெடுத்துவைத்துள்ள படம் 'வல்லவன்' இதில் 4 வேடங்களை ஏற்றுள்ள அவருக்கு காதல் சந்தியா, நயன்தாரா, ரீமா சென் ஆகியோர் ஜோடி. இந்தப் படத்தின் டைரக்டரும் சிம்புதான். அதுபற்றி அவரே சொல்கிறார்...

மன்மதன் படத்திலேயே நான் ஓரளவு டைரக்டர் ஆயிடடேன். இப்போது எனது முழு திறமையையும் நிரூபப்பதற்காக வல்லவனில் முழு நேர டைரக்டர் ஆகிறேன்.

'எனக்கு 20 வருஷமா சினிமாவைத் தெரியும். இந்தத் தொழிலுக்கு எனக்குப் பின் வந்து என்னைத் தாண்டிப் போனவுங்க உண்டு. சிம்பு தேறமாட்டான்னு என் காது படவே சிலர் பேசினாங்க. அதனால்தான் 'மன்மதன்' கதையில் இருந்து அனைத்து விஷயங்களிலும் நான் முழுக் கவனம் செலுத்தினேன்.

வெற்றி கிடைத்தது. தேறிட்டேங்கிற... பெயர் கிடைச்சுது. 'வல்லவன்' வந்ததும் இவனை அசைக்க முடியாதுன்னு சொல்வாங்க.

'வல்லவன்' கதை எனது மாறுபட்ட அனுபவங்களால் கிடைச்சுது. இதில் 4 வேடங்களில் நடிக்கிறேன். பள்ளி மாணவன், கல்லூரி மாணவன், வேலை தேடும் வாலிபன், மற்றொரு சிம்பு மர்மமானவன்.

இந்தப் படத்தல் காதல், காமெடி, களாமர், அதிரடி செண்டிமெனட் அத்தனையும் இருக்கும். மற்றவர்கள் இயககும படங்களுக்குக் கருத்துச் சொல்வது முறையல்ல. எனவே என் விருப்பப்படி 'வல்லவன்' அமைய வேண்டும் என்பதற்காக நானே முழுக்க முழுக்க டைரக்ஷன் செய்வது என்று முடிவுசெய்திருக்கிறேன்.

மன்மதனில் நடிச்சுக்கிட்டு டைரக்ஷனிலும் ஈடுபட்டது சவாலாகத்தான் இருந்துச்சு... இப்ப வல்லவனில் இரண்டையும் சாதிக்க முடியுங்கிற நம்பிக்கை வந்திருக்கு.

ரசிகர்களுக்குச் சந்தோஷத்துக்கு நடுவில் அவங்க மனசைத் தொடுற மாதிரியும் ஒரு விஷயததைச் செல்லனும. அதற்காகத்தான் நான் நாலு வேடத்தில் நடிக்கிறேன். 3 பேரைக் கதாநாயகியா தேர்வு செய்து இருக்கேன். இந்தப் படத்தில் மூணு கதாநாயகிகளுக்குமே சொல்லிக் கொள்ளுகின்ற மாதிரி நல்ல ரோல்தான்.

சும்மா வந்துட்டுப் போகிற மாதிரி இல்லை. வல்லவன்னு பெயர் வச்சுட்டு மூணு பேரைச் சமாளிக்க முடியலைன்னா எப்படி? அப்பா தான் எனக்கு கமரா முதல் ரீரிக்காடிங் வரை எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அதை என் ஸ்டைலில் கொடுக்கிறேன். அவர் கிட்ட பெற்ற அனுபவம்தான் எனக்குப் பாடம்.

எல்லா விஷயத்திலும் பத்து வருஷ அட்வான்ஸ் அனுபவ முதிர்ச்சி எனக்கு இருக்கு. அதனாலதான் பத்து வருஷத்துக்குப் பிறகு இறங்க வேண்டிய டைரக்ஷன் பொறுப்பில் இப்பவே இறங்கிட்டேன். எனக்கு யாரும் போட்டி இல்லை. படத்துக்கு என்ன தேவையோ அதைச் செய்யுறேன்.

## 'மஜா' பெயர் மாறுகிறது

தூய தமிழில் பெயர் சூட்ட வேண்டும் என்று சில அரசியல்வாதிகள் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து பல படங்களின் பெயர்கள் தமிழில் சூட்டப்படுகிறது.

அந்தவகையில் விக்ரம், அஸீன் இணைந்து நடித்து வரும் 'மஜா' படத்தின் பெயர் விரைவில் மாற்றப்படுகிறது. 'மஜா' என்ற பெயரை உச்சரிக்க ஒரு மாதிரியாக இருப்பதாலேயே படத்தின் பெயர் மாற்றப்படுகிறதாம்.



'மஜா' விக்ரம் - அஸின்

## செந்தில் மகனின் 'புதிய ஏற்பாடு'

நகைச்சுவை நடிகர் செந்திலில் மகன் நவீன், 'உன்னெ எனக்கு புடிச்சிருக்கு' மூலம் நாயகனாக அறிமுகமாகிறார். இந்தப் படம் திரைக்கு வரும் முன்பே இன்னொரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

அந்தப் படத்தை யூத் கிரியேஷன்ஸ் சார்பில் இராமமூர்த்தி தயாரிக்கிறார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி நவீன் கார்த்திக் இயக்குகிறார். கதாநாயகியாக 'என் காதலே' விகாஸினி நடிக்கிறார். படத்துக்கு 'புதிய ஏற்பாடு' என்று பெயரிடப்பட்டு உள்ளது. இதன் படப்பிடிப்பு முழுவதும் மலேசியா நாட்டில் நடத்தப்படுகிறது.

# ஆயர் பணியில் வெள்ளிவிழாக் காணும்

# நாயகனை வாழ்த்துகிறோம்

யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றும் பேரருட் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ். மறை மாவட்டத்திற்கும் அனைத்து



மக்களுக்கும் ஆற்றிவரும் பணி மகத்தானது. "நற்செய்திக்காக எல்லாவற்றையும் செய்கிறேன்" என்னும் விருதுவாக்குடன் 1992ஆம் ஆண்டு ஆயர் பணியினை ஆரம்பித்த யாழ்.ஆயர் யூலை 30ம் திகதி ஆயர் நிலையின் 25ஆவது வெள்ளி விழா ஆண்டில் காலடிபதித்தார்.

அதேவேளை இன்று (03-07-2005) அவரது பெயர் கொண்ட புனித தோமையாரின் திருவிழாவுமாகும். இன்று ஞாயிறு தினமாகையால் நாளை யாழ். மறைமாவட்டம் எங்கும் ஆயர்தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. யாழ். நகரப் பகுதி பாடசாலை மாணவர்களுடன் இணைந்து திருப்பலி நிறைவேற்றி ஆயர் தினத்தையும் வெள்ளி விழா ஆண்டின் ஆரம்பத் தையும் சிறப்பாக ஆயர் கொண்டாடு கிறார்.

பல்வேறு சிறப்புமிக்க இந்நன் நாளில் அவரது வாழ்வின் படிகளையும், பணிகளையும் நோக்குவது சாலவும் பொருத்தமானதாகும். கத்தோலிக்கம் வேரூன்றிய பகுதிகளில் ஒன்றான ஊர்காவற்றுறையில் இறைபக்தி மிகுந்த குடும்பத்தில் 1939ஆம் ஆண்டு ஆடி மாதம் 13ஆம் திகதி பிறந்தார். ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறையிலும் உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார். ஆழ்ந்த இறைபக்தியும் பெற்றோர், குருக்களின் வழிநடத்தலும் இவருடைய உள்ளத்தில் இறை அழைத்தலின் விதையைத் தூவின. குருத்துவ மாணவர்களின் பயிற்சிப் பாசறையில் இணைந்தார், கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரி மற்றும் ரோமையிலும் குருத்துவக் கல்வியை நிறைவு செய்து 21-12-1963இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

அன்று முதல் 10 வருடங்கள் பங்குத் தளங்களில் பணியாற்றினார். யாழ்.மரியன்னை பேராலயத்தின் உதவிப் பங்குத் தந்தையாகவும், பெரியவிளான், நானாட்டான், வங்காலைப் பகுதிகளின் பங்குத் தந்தையாகவும் கடமையாற்றினார். அக் காலப் பகுதியில் இவரது நிர்வாகத் திறமையும் மறை அறிவியல் புலமையும் மக்கள் தொடர்பாடலும் அனைவரையும் கவர்ந்தது. இந்த ஆற்றல்களுக்கு களம் அமைக்கும் வகையில் இந்தியாவில் சிறப்பு மறைக் கல்வி நெறியில் கற்றுத்தேறி 1973ல் மறைக்கல்வி டிப்ளோமாப் பட்டம் பெற்று அதே ஆண்டு யாழ் மறைக் கல்வி நடுநிலையத்தின் இயக்குநராக மறைந்த ஆயர் மேதகு வ. தியோகுப் பிள்ளை ஆண்டகையால் நியமிக்கப்பட்டார்.

உரோமாபுரி ஊர்பான் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெறும் வாய்ப்பு அவருக்கு 1977ஆம் ஆண்டு கிடைத்தது. இறையியல், மெய்யியல், சமூகவியல் துறைகளின் சிறப்பு ஆற்றல்களும் பல்வேறு பட்டங்களும் பெற்ற யூபிலி நாயகனுக்கு 1981ஆம் ஆண்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும்.

யாழ். மறைமாவட்டத்துடன் இணைந்திருந்த மன்னார்ப் பகுதி புதிய மறை மாவட்டமாகப் பிரிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் இவரது பணியும் தொடங்கியதால் புதிய அணுகுமுறைகளையும், சவால்களையும் எதிர்நோக்கி பணியைத் தொடர்ந்தார். சிறந்த ஆளுமை, பலரையும் மதித்து ஆலோசனைகளை ஏற்று அன்போடு பழகும் பண்பு, தீர்க்கமான எதிர்நோக்குத் தீர்மானங்களால் மன்னார் மறை மாவட்டத்தை சிறந்ததொரு நிலைக்கு உயர்த்தி 11 ஆண்டுகள் அங்கே பணியாற்றினார். அவ்வேளை யாழ். மறை மாவட்டத்தை பரிபாலித்து வந்த மறைந்த ஆயர் மேதகு வ. தியோகுப் பிள்ளை ஆண்டகை ஓய்வு பெற்றதை அடுத்து 08-08-1992இல் யாழ் ஆயராகப் பிரகடனப்படுத்தப்பட்டு 05-11-1992இல் தோமஸ் ஆண்டகை பணியேற்றார். யாழ்பேராலயத்தில் வெகு சிறப்புற நடந்த பணியேற்பு நிகழ்வுத் திருப்பலியில் தமிழரின் விடிவுக்காகவும்,. யாழ் மறை மாவட்டத்தின் உயர்வுக்காகவும் அயராது உழைப்பேன் என உறுதிகூறினார்.

இவர் யாழ். ஆயராக பொறுப்பேற்ற காலப்பகுதி விடுதலைப் போர் தீவிரமடைந்த நேரமாகும். பொருளாதாரத் தடைகள், போக்குவரத்து சீர்குலைவு, திடீர் தாக்குதல்கள், பஞ்சம் , பட்டினி, கல்விப் பாதிப்பு என்பவற்றால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர், அந்த வேளையில் இவர் மக்களுக்கு நம்பிக்கை தரும் மீட்பின் கேடயமாகச் செயற் பட்டார்.

வெளியுலகின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்த போதும் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை அவ்வப்போது திருப்பீடத்திற்கும் சர்வதேசத்திற்கும் பணிவுடன் எடுத்துக் கூறினார். சமாதானத்தின் தேவையை மக்களின் பாதுகாப்பை வலியுறுத்தினார். யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ராஜதந்திரிகள், அரசியல் தலைவர்களைச் சந்தித்து மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளைத் தெரியப் படுத்தினார். தென்னிலங்கை, வெளி நாட்டுப் பயணங்களின்போதும் அரசியல் தலைவர்களைச் சந்தித்து உண்மைக்கும் நீதிக்கும் அமைதிக்கும் ஓங்கிக் குரல் கொடுத்து வந்தார். தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் முன்னெடுப்புகளை ஆதரித்து அறிக்கைகள் வெளியிட்டு வந்தார்.

வரலாற்று இடப்பெயர்வை மக்கள் சந்தித்து சொல்லொணாத் துன் பங்களில் துவண்ட போது யாழ். திருச்சபையினதும் அதன் சார்ந்த நிறுவனங்களினதும் மனித நேயப் பணிகளை முடுக்கி விட்டு மக்களின் துயர் துடைக்கும் நல்ல தந்தையாக மக்களின் வாழ்வியலை உறுதிப்படுத்தினார். யாழ் தலத்திருச்சபையும் பேரிழப்பை சந்தித்த போதும் இயலுமான உதவிகளை மக்களுக்கு வழங்கத் தவறவில்லை. தனது சிறந்த திட்டங்களால் அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து யாழ் திருச்சபையை, அழிந்த ஆலயங்களை மீளக் கட்டி எழுப்பினார்.

எமது ஆயர் மிகவும் எளிமையானவர். பண்பாடுகளையும், தமிழையும், கலையையும், கல்வியையும் நேசிப்பவர். ஆயர் இல்லத்தில் இருந்து சாதாரண குருவைப் போன்று சைக்கிளில் பயணித்து குருமட மாணவர்களையும், குருக்களையும் சந்தித்து

**எஸ். யேசுதாஸ்**
கொழும்புத்துறை.

வழிகாட்டி நெறிப்படுத்துவது அவரது வழமையாகும். தற் பெருமை பாராட்டாத அன்புநிறை பண்பாளன் என இவரது செயற்பாடுகள் கட்டியம் கூறி நிற்கின்றன.

கத்தோலிக்க மக்களின் பரம்பலையும் காலத்தின் தேவையையும் கருத்திற் கொண்டு யாழ்.மறை மாவட்டத்தில் பல புதிய பங்குத் தளங்களை உருவாக்கி இறை மக்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி ஆன்மீக வளர்ச்சிக்கு ஊட்டம் கொடுத்துவரும் உன்னத கடமை வீரன்.

போற்றுவார் போற்றினும் தூற்றுவார் தூற்றினும் உண்மையை, நீதியை, தூய கருத்துக்களை உறுதியுடன் எடுத்துரைக்கும் தற்துணிவு படைத்தவர்.

சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் சமாதான ஒப்பந்தத்தை வரவேற்றுப் பாராட்டினார். அந்த வேளை ஆலயங்கள், பாடசாலைகள், விவசாய நிலங்கள், குடிமனைகளில் இருந்து படையினர் வெளியேறி மக்களின் இயல்பு வாழ்வு உறுதிப்படுத்தப் பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

மகிழ்வாரோடு மகிழ்ந்து அழுவாரோடு அழுது கனிவும் கொண்ட பரிவின் தந்தை ஆழிப்பேரலையால் மக்கள் உயிர்களை, உடமைகளை இழந்து நிர்க்கதியாக நின்ற வேளை ஆயரில்லத்தில் உள்ள தனது மந்தைக்காக உயிரைக் கொடுக்கும் நல்லாயன் போன்று பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று மக்களின் துயரில் பங்குகொண்டார். நான் என்றும் உங்களோடு கூட இருக்கிறேன் என யேசுவின் அன்பை வெளிப்படுத்தி அக்கறையுடன் மக்களைத் தேற்றி ஆறுதல் அளித்தார். தாராள உதவிகளை வழங்கினார்.

மறைந்த திருத்தந்தையின் பன்மத நல்லுறவுக் கொள்கையைப் பின்பற்றி பிறமத அமைப்புக்களுடன் இறுக்கமான தொடர்புகளைப் பேணி செயலாற்றும் புரிந்துணர்வாளர். பிறமத பண்டிகைகள், கொண்டாட்டங்களுக்கு மதிப்பளித்து இவர் விடுக்கும் வாழ்த்துச் செய்திகள் இதற்கு மகத்தான சான்றாகும்.

கத்தோலிக்க திருச்சபையின் புதிய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் முதன்முதலில் இலங்கை ஆயர்கள் வத்திக்கானில் சந்தித்த போது இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்பட திருத்தந்தை உதவ வேண்டுமென கேட்டு நாட்டின் மீதும் மக்கள் மீதும் கொண்ட கரிசனையை வெளிப்படுத்தினார்.

இவ்வாறு சமயப் பணியையும், சமுதாயப் பணியையும் இரு கண்களாக நினைத்து சேவையாற்றும் இறை வழிகாட்டியான யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பணிகள் பரந்து விரிந்து செல்கிறது.

ஆயர் பணி வாழ்வின் வெள்ளி விழா ஆண்டில் நுழையும் ஆயர் இன்னும் பல தசாப்தங்கள் உடல் உள உறுதியுடன் பணியாற்றி இறையரசையும் மனித விழுமியங்களையும் இகமதில் நிறுவ இறைவரம் வேண்டி வாழ்த்துவது நம் எல்லோரது கடமையாகும். □

## பெருந் திருவிழா

(யாழ்ப்பாணம்)

துன்னாலை ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா இன்று காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (அ)

## படையினருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

மட்டக்களப்பு ஊறணியில் கடந்த வியாழக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த மூவருக்கும் மரணத்திற்குப் பின்னரான பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

சார்ஜண்ட் ஆர்.எம்.எஸ்.குலரத்ன, ஸ்ராவ சார்ஜண்டாகவும், லான்ஸ் கோப்ரல் சமன் குமார முழு அந்தஸ்தைக் கொண்ட கோப்ரலாகவும், சாரதி சமிந்த குமார லான்ஸ் கோப்ரலாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## ஷெல் காஷ் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சமையல் எரிவாயு (ஷெல் காஷ்) விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ் அதிகரிப்பின் படி 12.5 கிலோக்கிராம் நிறையுடைய ஷெல் காஷ் சிலிண்டரின் விலை 94 ரூபாவினால் உயர்த்தப்பட்டுள்ளது.

கொழும்புக்கு வெளியே விற்பனை செய்யப்படும் சமையல் எரிவாயுவின் விலையுடன் போக்குவரத்துக் கட்டணம் வழமைபோன்று சேர்த்துக் கொள்ளப்படும் என ஷெல்காஷ் லங்கா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தினால் மிதிவெடி அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் புத்தூர்ச் சந்திக்கும் ஆவரங்கால் சிவன் கோவிலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தின் 12016 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட ஒரு பகுதி பொதுமக்களின் பாவனைக்காக, கச்சேரியில் இயங்கும் யாழ்மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் ஊடாக நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

## உள்ளூராட்சி வாரம்

(சாவகச்சேரி)

2005ஆம் ஆண்டிற்கான உள்ளூராட்சி வாரமாக செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டுள்ளது.

யூலை மாதம் இடம்பெறவிருந்த உள்ளூராட்சி வார நிகழ்வுகள் செப்ரெம்பர் மாதத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (அ-21)

## ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்காக பலநாள் கலன்களை வழங்குவதற்கு —ரவ்பன் அமைப்பு முன்வருகை—

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஆழ்கடலில் மீன்பிடித்தொழிலை மேற்கொள்வதற்குத் தேவையான பலநாள் கலன்களை வழங்குவதற்கு தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான துரித செயலணி (ரவ்பன் அமைப்பு) முன்வந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் சிறிய கலன்களைப் பயன்படுத்தியே மீன்பிடித்தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு சிறிய கலன்களைப் பயன்படுத்தி மீன்பிடித்தொழிலை மேற்கொள்வதனால் அதிக வருமானம் ஈட்ட முடியாதுள்ளது.

இதனால் பலநாள் கலன்களைப் பயன்படுத்தி ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு அதிக வருமானத்தை ஈட்டு முகமாகவே சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனபிடிக் குடும்பங்களுக்கு இப் பலநாள் கலன்கள் வழங்கப்படவுள்ளன.

இப் பலநாள் கலன்களை ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள கடற்றொழில் சங்கங்கள், சமாசங்கள் என்பவற்றுக்கு வழங்கி அவர்கள் மூலம் ஒழுங்குபடுத்தி இத்தொழிலை மேற்கொள்வது எனவும் அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ந-19)

## பாதிக்கப்பட்டோர் விசனம்

(திருநெல்வேலி)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஆறு மாத காலம் கடந்துவிட்ட போதும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படாமை குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான காணிகள் கூட இதுவரை பகிர்ந்தளிக்கப்படவில்லை. பல நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றுகின்ற போதும் 3ஆம் கட்டமான நிரந்தர வீட்டுத் திட்டப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ந-43)

## கட்டமைப்பை முழுமையாக அறிந்தவர்கள் எவரும் அச்சம் கொள்ளமாட்டார்கள்

### அமைச்சர் டி.யு.குணசேகர

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அது தொடர்பாக எழுந்துள்ள எதிர்ப்பலைகள் இயற்கை மரணத்தை எய்திவிடும்.

இத்தகைய எதிர்ப்புக்களுக்கு அஞ்சி புனரமைப்புப் பணிகளை தாமதப்படுத்த முடியாது. எனவே பொதுக்கட்டமைப்பு வேலைத்திட்டங்கள் இன்னும் சில தினங்களுக்குள் ஆரம்பிக்கப்பட்டுவிடும் என அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண புனரமைப்பு நடவடிக்கைகளை கூடிய விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகவும் திடமாகவுள்ளார். புனரமைப்பு வேலைத் திட்டங்கள் ஆரம்பமானதும் இந்த சிறிய விடயத்தையா எதிர்த்தோம் என்று எதிர்ப்புத் தெரிவிப்பவர்களே ஆச்சரியப்படுவார்கள்.

பொதுக்கட்டமைப்பு ஆவணத்தை முழுமையாக வாசித்து அறிந்தவர்கள் இதுகுறித்து அச்சம்கொள்ள மாட்டார்கள். இதேவேளை, பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் மத்தியில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்கள் பிரதிநிதிகளையே சிபாரிசு செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இதேசமயம் பொதுக்கட்டமைப்பு உயர் மட்டக் குழுவில் அரசாங்கத்தரப்பு பிரதிநிதியாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரிம்பீரிஸ் அல்லது டெ்ரன் அமைப்பின் தலைவர் மனோதித்தவெல நியமிக்கப்படலாம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-4)


# விண்வெளியில் நாளை வியத்தகு போர்




● தாக்குதல் ஏற்கனவே சாப்ட்வேர் மூலம் திட்டமிடப் பட்டுள்ளது. நாசாவின் ஒளி கணக்கீட்டு முறையில் வால் நட்சத்திரம் தப்பிக்க வழியே இல்லை.

● தாக்குதல் நடத்துவதற்கு 24 மணிநேரம் முன்பாக விண்கலத்திலிருந்து தாக்குதல் கலன் தனியாக பிரிந்து வால்நட்சத்திரத்தை துரத்தும்.

அமெரிக்காவின் நிஜ 'ஸ்டார் - வார்'




விண்வெளியில் நடைபெறும் தாக்குதல்களை ஹொலிவுட் படங்களில் பார்த்திருக்கின்றோம். திரையில் பார்த்த அந்த சம்பவத்தை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாசா' நிஜமாக்கப்போகிறது. யூலை 4ல் அதாவது நாளை பூமியில் இருந்து 8.3 கோடி மையில்களுக்கு அப்பால் வால் நட்சத்திரத்தின் மீது ராட்சத தாக்குதல் நடத்தி உலக மக்களின் கவனத்தை தன் பக்கம் ஈர்க்கவிருக்கிறது.

வால் நட்சத்திரத்தின் மீது தாக்குதல் நடத்துவதால் என்ன லாபம் என்பதை அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஷூற்கு நாசா விஞ்ஞானிகள் தெளிவாக விளக்கியுள்ளனர்.

அவை வருமாறு,


- கோள்களில் எப்படி பள்ளங்கள் உருவாகின்றன என்பதைப்பற்றி ஆராய்வது.
- பள்ளங்களின் விட்டம் மற்றும் ஆழத்தைஅளப்பது.
- வால் நட்சத்திரம் எதிலிருந்து உருவானது என்பதை கண்டறிவது.
- தாக்குதல் நடத்துவதால் வால் நட்சத்திரத்தில் ஏற்படும் மாற்றங்கள்.

இதைத்தவிர வேறு நன்மைகளும் இருக்கின்றன. பூமியில் ஏற்பட்டுள்ள பள்ளங்கள், வால் நட்சத்திரங்களால் உருவானதா என்பதைக் கண்டறிய முடியும். தவிர முன்பு தாக்குதலின் போது பூமியில் எந்தளவிற்கு பாதிப்பு ஏற்பட்டது. எதிர்காலத்தில் ஒருவேளை பூமி மீது ஏதாவது விண் கல் அல்லது வால் நட்சத்திரம் தாக்கினால் என்ன ஆகும் என்பது பற்றியும் அவர்கள் கணக்கிட்டு விடை சொல்வார்கள்.




● தாக்குதலுக்கு 2 வினாடிகளுக்கு முன், தாக்குதல் நடத்தும் கலன், வால்நட்சத்திரத்தை போட்டோ எடுத்து பூமிக்கு அனுப்பி வைக்கும்.

● 1000 கி.மீ., [மணிக்கு] வேகத்தில் சென்று ராட்சத தாக்குதல் நடத்தும். ஓவியரின் கற்பனையில் தாக்குலுக்குப் பிந்தைய வால் நட்சத்திரம்

● இந்த தாக்குதலால் வால் நட்சத்திரத்தின் பாதையில் மாற்றம் இருக்காது. அதனால் பூமிக்கு எந்த பாதிப்பும் இல்லை.

தாக்குதல் நடந்தபின் உடைந்து சிதறும் வால் நட்சத்திர பகுதி. சூரிய குடும்பத்தின் உண்மைகள் இதிலிருந்து அறியப்படும்

இந்தத் திட்டத்தில் தாக்குதல் நடத்துவதற்கு வால் நட்சத்திரத்தை தேர்வு செய்வதற்கும் காரணங்கள் இருக்கின்றன. சூரிய குடும்பத்தில் முதலில் தோன்றிய வற்றில் வால் நட்சத்திரங்களும் ஒன்று. வால் நட்சத்திரங்கள் சூரிய குடும்பம் உருவான கதையைக் கொண்டிருக்கும் புத்தகம் போன்றன தாக்குதல் நடத்தி உள்ளே இருப்பவைபற்றி அறிந்தால்தான் வரலாறு தெரியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பனிக்கட்டி, வாயு மற்றும் தூசு துகழ்களான வால் நட்சத்திரங்களின் மையப்பகுதி நியூக்லியஸ் என்றழைக் கப்படுகிறது. சூரிய குடும்பத்திற்கு வெளியே பல கோடி மைல்கள் சென்றுவிட்டு மீண்டும் சூரிய குடும்பத்துக்குள் வந்து செல்லும் வால் நட்சத்திரங்கள் வானியல் விஞ்ஞானிகளுக்கு பல நேரங்களில் உபயோகமான தகவல் களை அளித்துள்ளன.

தற்போது தாக்குதலுக்கு இலக்காகும் வால் நட்சத்திரத்தின் பெயர் டெம்பள் 1.தாக்குதல் விண்கலத்தில் இருந்து நடத்தப்படும் தாக்கம் பொருள் 370 கிலோ எடைகொண்டது. தாக்கிய வேகத்தில் ஏற்படும் குழி 100அடிக் கும் மேல் ஆழம் கொண்டதாகவும் இருக்கும். பள்ளத்தின் அகலம் ஒரு பெரிய கட்டடத்தின் அளவில் இருந்து ஒரு கால்பந்து மைதானம்வரையில் இருக்கும்.

வால் நட்சத்திரத்தில் மோதல் ஏற்பட்டு நொறுங்கும் பனிக்கட்டிகள் மற்றும் சிதறல்களை விஞ்ஞானிகள் ஆய்வு செய்வார்கள். வால் நட்சத்திரத்தில் இருந்து வெளியாகும் தூசுகள் சூரிய ஒலியுடன் வினைபுரிந்து புதிய ஒளியை உமிழும் வால் நட்சத்திரத்தை பின்தொடரும். விண்கலம் உடனுக்குடன் போட்டோக்களை எடுத்து பூமிக்கு அனுப்பிவைக்கும்.

இதற்குமுன் நாசாவின் திட்டங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் சரிபார்க்கப்பட்டு சூரிய குடும்பம் உருவான விதம்பற்றி ஒரு புதிய தகவல் வெளியிடப்படும். வால் நட்சத்திரத்தை தாக்கும் இந்தத்திட்டம் 1999 நவம்பரில் தொடங்கியது. டெல்ரா 2. ராக்கெற் மூலம் "டீப் இம்பாக்ற்" விண்கலம் கடந்த ஜனவரி 12இல் அனுப்பப் பட்டது. புவியின் சுற்றுப்பாதையில் இருந்து விலகி தற்போது வால் நட்சத்திரத்தின் சுற்றுப்பாதையை அடைந் துள்ளது. வினாடிக்கு 10.2கி.மீ. வேகத்தில் செல்லும் வால் நட்சத்திரதை பின்தொடரும் விண்கலம் 500கி.மீ. தூரம் நெருங்கும்போது தாக்குதலைத் தொடங்கும்.

வில்கெம் டெம்பள் என்னும் வானியல் அறிஞர்தான் 1867ல் இந்த வால் நட்சத்திரத்தை கண்டறிந்தார். ஆனால் அவர் பெயரே அவர் கண்டுபிடிப்புக்கு சூட்டப்பட்டது. சூரியனை ஒருமுறை இந்த வால் நட்சத்திரம் சுற்றிவர 5.5 ஆண்டுகள் ஆகும்.




● இந்த சம்பவங்கள் அனைத்தையும் விண்கலம் 500 கி.மீ., தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்து படங்களை அனுப்பி வைக்கும்.

● பூமியில் இது போன்ற தாக்குதல் ஏற்கனவே நடந்திருக்க வேண்டும் என்ற விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

- விண்வெளியில் தாக்குதல் நடத்தவேண்டும் என்பது 30 ஆண்டுக்கனவு 2001இல் ஆர்தர் கிளார்க் இதைக் கதைவடிவில் புத்தகமாக வெளியிட்டார்.
- இந்தத்திட்டம் 1996இல் பரபரப்பாகப் பேசப்பட்டு பின்பு நிராகரிக்கப்பட்டது. மீண்டும் 1999இல் இத் திட்டத் திற்கு உயிர்கொடுக்கப்பட்டது.
- பல்வேறு நிறுவனங்கள் இந்த ஆய்வுப்பணியில் ஈடுபட்டுள்ளன. நாசா மற்றும் மேரிலேட் பல்கலைக்கழகம் ஆகியன இதில் ஈடுபட்டுள்ள முக்கிய நிறுவனங்கள்.
- இந்த நிகழ்ச்சியால் பூமிக்கு ஆபத்தில்லை. எனினும் இதை பூமியில் இருந்து பார்க்கமுடியாது.
- 2005 யூலை 4ல் இவ் விண்கலம் டெம்பல் ஒரு வால் நடசத்திரம்மீது ராட்சத தாக்குதல் நடத்தும்
- விண்கலத்தின் எடை 650 கிலோ. அது தாங்கிச் சென்றுள்ள தாக்குதல் நடத்தும் கலனின் எடை 370கிலோ.
- நாசாவின் பிற விண்கலங்களான ஹப்பிள், ஸ்பிட்சர் உள்ளிட்ட விண்வெளி தொலை நோக்கிகளும் இந்த சம்பவத்தை நேரடியாக பதிவுசெய்யும். ஐரோப்பிய விண்வெளி நிறுவனமும் இதைப் படம் எடுக்கவிருக்கிறது.

விண்கலத்தில் இருந்து சீறிச்சென்று தாக்கும் கலன் தாமிரத்தால் ஆனது தாக்குதலுக்குப் பின்னர் விண்கலத்திற்கு ஏதும் பாதிப்பு வரலாம் என்றும் நாசா வஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். அதற்குள் வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். (ற)

# திருமலை புத்தர்சிலை விவகாரத்தை கண்டித்து

## யுனெஸ்கோ முன்பாக அமைதிப் போராட்டம்

பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையத் தினரினால் பாரிஸில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான கல்வி கலை கலாசாரம் விஞ்ஞானம் ஆகியவற்றின் தலைமைக் காரியாலயமான யுனெஸ்கோ முன்பாக அமைதிப் போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

திருகோணமலையில் சட்டவிரோதமாக அரசியல் நோக்குடன் திடீர் புத்தர் சிலை நிறுவப்பட்டதைக் கண்டித்தும் சர்வதேச சமுதாயத்திடம் இந்தப் புத்தர் சிலையை உடன் அகற்றுமாறு கோரியும் இந்த அமைதிப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஏராளமான தமிழ் மக்களும் சில தோழமை அமைப்புக்களின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர் அமைதிப் போராட்டம் பாரிஸ் ஏழாவது மாவட்டத்தில் யுனெஸ்கோ தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாகவுள்ள பொன்ரினே சதுக்கத்தில் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகியது.

போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் திருகோணமலை புத்தர்சிலை விவகாரத தில் அரசும் அதன் ஊதுகுழலான இலங்கையின் நீதித்துறையும், தமிழ் மக்கள் மீது பாரபட்சமாக நடந்துகொள்வதை கண்டித்து வாசக அட்டைகளை தாங்கியவண்ணம் நின்றனர். இந்த அமைதிப் போராட்டத்தின் முடிவில் யுனெஸ்கோ இயக்குநர் நாயகத்திற்கு மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மே 18ஆம் திகதி திருகோணமலை மாவட்ட நீதிபதி சட்டவிரோதமாக நிறுவப்பட்ட புத்தர்சிலையை உடன் அகற்றுமாறு கட்டளையிட்டார். மீண்டும் தனது தீர்ப்பை மே 25ஆம் திகதி உறுதிசெய்தார். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை.

இந்தப் புத்தர்சிலை விவகாரத்தில் அரசு நிதிமன்றத்தின் கட்டளையை ஒருமாத காலமாகியும் நிறைவேற்றவில்லை. மாறாக ஒரு மாத காலத்தின் பின்னர் அதாவது சென்ற வாரம் ஓர் இனவாத பௌத்த நீதிபதியை கொண்ட மேன்முறையீட்டு பரிசீலனை நீதி மன்றத்தினால் திருகோணமலை மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு இரத்துச்செய்யப்பட்டுள்ளது. இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் பிரதம தளபதியும் நிறைவேற்று அதிகாரத்தைக்கொண்ட ஜனாதிபதியும் விரும்பியிருந்தால் இந்தப் புத்தர்சிலை விவகாரத்தை திருகோணமலை மாவட்ட நீதிபதியின் உத்தரவுடன் மிகவும் இலகுவாக அகற்றியிருக்கலாம். மாறாக இந்தப் புத்தர் சிலைக்கு பாதுகாப்புக்கொடுத்து சிலையை அகற்ற விடாது கவனிப்பது சிறிலங்காவின் இரு வேறுபட்ட நீதி முறைகள் நடைமுறையில் உள்ளதென்பதை தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

எனவே, திருகோணமலையில் இரத்தக் களறியை தவிர்க்கவும் இன்னுமொரு போர் சிறிலங்காவில் மூழாமல் பார்க்கவும் நீங்கள் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு சர்ச்சைக்குரிய புத்தர் சிலையை அகற்ற உதவுமாறு வேண்டுகிறோம் என்று அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ரீட்டா ஜோன் கொலை வழக்கு;

## மரண தண்டனைக் குற்றவாளிகளுக்கு தண்டனையை நிறைவேற்ற பரிந்துரை

(கொழும்பு)

ரீட்டா ஜோன்கொலை வழக்கின் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ரீட்டா ஜோன் கொலை வழக்கில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கான மரண தண்டனைகளை நிறைவேற்றுமாறு நீதியமைச்சும், சட்டமா அதிபரும் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

ரீட்டா ஜோன் வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற விசேட மூன்று நீதிபதிகள் குழு 1999ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி அந்த வழக்கின் குற்றவாளிகள் மூவருக்கும் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து குற்றவாளிகள் மூவரும் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்தனர்.

எனினும், மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிசெய்த உயர் நீதிமன்றம் அவர்களின் மனுவை 2004ஆம் ஆண்டும் மே மாதம் 13 ஆம் திகதி தள்ளுபடி செய்தது.

இந்தியப் பிரஜையான ரீட்டா ஜோன் தனது கணவருடன் கொழும்பு முகத்துவார காக்கைதீவு கடற்கரையில் பொழுதைக் கழித்துவிட்டு மீண்டும் வீடுநோக்கி செல்கையில் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டார்.

சம்பவம் நிகழ்ந்து இரு தினங்களின் பின்னர் சேற்றுக்குழிக்குள் இருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் குற்றவாளிகளாக நிருபிக்கப்பட்ட மூவருக்கும் நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனையை அடிப்படையாக வைத்து நீதியமைச்சும் சட்டமா அதிபரும் இரு நீண்ட அறிக்கைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இதற்கமைய ரீட்டா ஜோன் கொலை குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் திகதி நேரம் மற்றும் இடம் பற்றிய அறிவித்தலில் கையெழுத்திடும் பொறுப்பு தற்போது ஜனாதிபதியிடம் உள்ளது. இதுவரை மரணதண்டனை விதிக்கப்பட்ட சுமார் 100கைதிகள் அளவில் சிறைச்சாலைகளில் இருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூத் தெரிவித்துள்ளார்.

தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் யாவும் தற்போது பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாகவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# குஜராத்தில் பலத்த மழை; உயிரிழப்பு 120 ஆக உயர்வு

(ஆமதாபாத்)

குஜராத் மாநிலத்தில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையால் அம் மாநிலத்தின் 70 சதவீத பகுதி வெள்ளத்தில் மிதக்கிறது. குறிப்பாக கேடா, ஆனந்த், பரோடா ஆகிய 3 மாவட்டங்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த 3 மாவட்டங்களிலும் எங்கு பார்த்தாலும் வெள்ளக காடாகக் காட்சி அளிக்கிறது. வதோதரா, சூரத் நகரங்கள் நிலை குலைந்து போய் விட்டன. அந்த 2 நகரங்களிலும் போக்குவரத்து முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.



வதோதரா, சூரத் நகரங்களில் மீட்புப் பணிகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய மந்திரி சிவராஜ் பாட்டீல், குஜராத் முதல் - மந்திரி நரேந்திர மோடி நேற்று விமானத்தில் பறந்து பார்த்து ஆய்வு செய்தனர். குஜராத்தில் சுனாமி பாதிப்பு போன்று இங்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று முதல் - மந்தரி நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அவர் வேண்டுகோளை ஏற்றுக் கூடுதல் இராணுவ படையை குஜராத்துக்கு மத்திய அரசு அனுப்பி உள்ளது. மேலும் முதல் கட்டமாக ரூ500 கோடி நிதி உதவியையும் வழங்கி உள்ளது.

இவ் அனாத்தத்தால் 2 கோடிக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 2 இலட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு பத்திரமான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.


நூற்றுக்கணக்கானவர்கள் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கின்றனர். அவர்களை ஹெலிகொப்டர் மற்றும் எந்திரப படகுகளில் சென்று மீட்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. மழைக்கு நேற்றுவரை 120 பேர் பலியாகியுளளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான பெண்களையும், குழந்தைகளையும் காணவில்லை. அவர்கள் கதி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது.

ஏராளமான குக்கிராமங்களை வெள்ளம் சூழந்துள்ளது. அந்தக் கிராமங்களில் இந்திய விமானப்படை விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன. இந்தூர் - காந்திநகர் இடையே ஓடும் ரயில் தகார் எனும் இடத்தில் வந்தபோது வெள்ளத்தில் சிக்கியது. இதையடுத்து ஒரு பயணி செல்போன் மூலம அதிகாரிகளுககுத் தகவல் கொடுத்தார். அதன் பிறகு பயணிகள் மீட்கப்பட்டனர்.

வதோதராவில் மட்டும 800 பேரைத் தீயணைப்புப் படையினர் மீட்டனர். தொடர் மழை நீடிப்பதால் ஆமதாபாததில் இருந்து புறப்படும் அனைத்து ரயில்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மழை நீடிப்பதால் 8000 கிராமங்கள் துண்டிக்கப்பட்டு தீவுகளாக காட்சி அளிக்கின்றன. 31 நகரங்களும் வெள்ளத்தில் மிதக்கிறது. அங்கு விமானப்படை ஹெலிகொப்டர்கள் தாழ்வாகப் பறந்து தவிக்கும மக்களை மீட்டு வருகின்றன. பல நகரங்களில் வெள்ள அபாயம் நீடிக்கிறது.

தொடர்மழை காரணமாக குஜராத் மாநில மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் முடங்கி உள்ளன. (ந)



பா.விஜய் எழுதிய கவிதைப் புத்தக வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்கிய தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு 4 அடி உயரத்தில் பரிசுக் கேடயத்தை விஜய் வழங்கினார். அதில் கருணாநிதியின் கைவிரலில் அய்யன் திருவள்ளுவர் மோதிரம் அணிவிப்பது போன்று இடம்பெற்றிருந்த கண்கொள்ளாக் காட்சியைக் காணலாம்.




## மந்திரிகள் - அதிகாரிகள் இராஜினாமா
# பிலிப்பைன்ஸ் அதிபருக்கு நெருக்கடி முற்றுகிறது

(மணிலா)

பிலிப்பைன்சில் இப்போது அதிபராக இருப்பவர் குளோரியா அரோயா. இந்த பெண் அதிபர் கடந்த ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் முறைகேடு நடத்தியதாக தகவல் வெளியானது. தனது வெற்றிக்கு சாதகமாக செயல்படும் படி தேர்தல் அதிகாரியுடன் இவர் டெலிபோனில் பேசிய ஆடியோ ஆதாரம் வெளியானது.

அத்துடன் பெண் அதிபரின் குடும்பத்தினருக்கும் சூதாட்டக் கும்பலுக்கும் தொடர்பு இருந்ததாகவும் புகார் கூறப்பட்டது. பெண் அதிபர் குடும்பத்தினா சூதாட்ட கும்பலிடமிருந்து கோடிக் கணக்கில் பணம் பெற்றதாகவும் புகார் கூறப்பட்டது.

இதையடுத்து பெண் அதிபர் இராஜினாமா செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி எதிர்க் கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன. பாராளுமன்ற முற்றுகை போராட்டமும் நடைபெற்றது.

இந்நிலையில், பெண் அதிபருக்கு எதிர்புத் தெரிவித்து விவசாயத்துறை மந்திரி ஆர்தர்யாப தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார். இந்த மந்திரி மீது ஏற்கனவே வரி ஏய்ப்பு செய்ததாக புகார் உள்ளது.

குளோரியாவுக்கு ஏதிர்ப்புத் தெரிவித்து மேலும் சில மந்திரிகள் இராஜினாமா செய்ய முடிவு செய்திருக்கிறார்கள்.

இதேபோல சில அதிகாரிகளும் இராஜினாமா செய்திருக்கிறார்கள். இந்த விவகாரம் காரணமாக அதிபர் குளோரியாவுக்கு நெருக்கடி முற்றி வருகிறது.

பெண் அதிபரின் கணவர் மைக் இப்போது வெளிநாடு சென்றிருக்கிறார். சூதாட்ட கும்பலடம் பணம் பெற ஏற்பாடு செய்தவர் இவர்தான் என்று கூறப்படுகிறது. அவர் எப்போது வெளிநாட்டில் இருந்து திரும்புவார் என்ற கேளவி தற்போது எழுந்துள்ளது. (ந)

# மறைந்த அதிபர் நிக்சனுக்கு பதிலடி; இந்திராகாந்திக்கு புஷ் புகழாரம்

மறைந்த அதிபர் நிக்சனுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்திராகாந்திக்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் புகழாரம் சூட்டி உள்ளார்.

1971ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போர் நடந்த போது அமெரிக்க அதிபராக நிக்சன் இருந்தார். அப்போது கிழக்குப் பாகிஸ்தான் (தற்போதைய வங்காள தேசம்) மீது இந்தியா போர் தொடுத்தது. அங்கு இந்திய படைகளை வாபஸ் பெறும்படி நிக்சன் கூறினார்.

ஆனால் அதற்கு அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி மறுத்து விட்டார். அதனால் ஆத்திரம் அடைந்த நிக்சன் இந்திரா காந்தியை 'கிழட்டு சூனியக்காரி' என்றும் இந்தியர்களை நய வஞ்சகர்கள் என்றும் திட்டினார்.

அப்போது அமெரிக்க வெளியுறவு அமைச்சராக இருந்த ஹென்றி கீசிங்கர் இந்தியர்களை 'தேவடியாள் மக்கள்' என்று அருவருப்பான மொழியில் வசைபாடினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை ஆவணங்களில் பதிவான இந்த வார்த்தைகள் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டன. நிக்சனின் இந்த அர்ச்சனைக்கு ஈடுகட்டும் வகையில் இந்திராகாந்திக்கு தற்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் புகழாரம் சூட்டி உள்ளார்.

வோஷிங்டன் நகரில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலகிற்கு வறுமை பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. அதை ஒழிக்க இந்திராகாந்தி போராடினார் என்று புஷ் குறிப்பிட்டு இருக்கிறார்.

இந்திராகாந்தி பற்றி தரக்குறைவாக பேசியதற்கு அமெரிக்க முன்னாள் வெளியுறவு அமைச்சர் கீசிங்கரும் வருத்தம் தெரிவித்துள்ளார்.

35ஆண்டுகளுக்கு முன்பு அப்போது உள்ள சூழ்நிலையில் அப்படிப் பேசினேன். அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திரா காந்தி மீது எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு என்று கீசிங்கர் கூறியிருக்கிறார். (ந)

## அமெரிக்காவின் பாதுகாப்பில் ஓட்டை?
# மீண்டும் வெள்ளை மாளிகை மீது அத்துமீறிப் பறந்தது விமானம்



(வோஷிங்டன்)

வெள்ளை மாளிகையின் மேல் அத்துமீறி தனியார் விமானம் பறந்ததால் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. அலுவலக பணியிலிருந்த அதிபா ஜோர்ஜ் புஷ் உட்பட பல அமைசசர்கள், அதிகாரிகள் உடனடியாக பணியை நிறுத்திவிட்டு மிகுந்த பாதுகாப்பு நிறைந்த பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் குடியிருக்கும் வெள்ளை மாளிகை பகுதியில அனுமதியின்றி விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நியூயோர்க் நகர இரட்டை கோபுரங்களை தீவிரவாதிகள் தகர்த்த பிறகு இந்த விதிமுறை மிகத் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வெள்ளை மாளிகை அருகே உள்ள ஓவல் அலுவலகத்தில் அதிபர் ஜோர்ஜ் புஷ் கடந்த வியாழக்கிழமை பணியல் இருந்தார். அப்போது வடகிழக்குப் பகுதியில் 13கிலோமீற்றர் தூரத்தில் இரடடை இன்ஜின் பொருத்திய தனியார் விமானம் அத்துமீறி அந்தப் பகுதியில் புகுந்தது. உடனடியாக வெள்ளை மாளிகை பாதுகாப்பு அதிகாரிகள் அபாய எச்சரிக்கை அறிவிப்பு வெளியிட்டனர். அதில் வெள்ளை மாளிகை பாதுகாப்பு படையினர் அடையாளம் தெரியாத விமானத்தை துரத்துகின்றனர் என தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக, அப்பகுதி முழுவதும் திடீர் பரபரப்பு தொற்றியது. பாதுகாப்பு படையினர் ஆயுதங்களுடன்அங்குமிங்கும் தாவினர். பணியில் இருந்த அதிபர் ஜோர்ஜ் புஷ் , அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை உடனடியாக வெளியேற்றி பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து செல்ல உத்தரவிட்டனர். அதிபர் புஷ் பணியை பாதியில் கைவிட்டு அவரது இல்லத்திற்கு திரும்பினார். அமைச்சர்களும் அதிகாரிகளும அவ்வாறே பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேரிலாந்தில் உள்ள ஆண்ட்ரூஸ் விமானப்படைத்தளத்தில் இருந்து சீறிப்பாய்ந்த இரு போர் விமானங்கள் தடையைமீறிப் பறந்த விமானத்தை இடை மறித்தன. பின்னர் அதை வழி நடத்திச் சென்று வர்ஜீனியாவில் உள்ள வின்செஸ்டர் விமான தளத்தில் பாதுகாப்பாக சில நிமிடங்களில் தரையிறக்கின.

இது குறித்து அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் தகவல தொடர்பாளர் ஸ்காட் மெகல்லன் கூறுகையில்,

அதிபர் ஜோர்ஜ் புஷ் தற்காலிகமாக அவரது வீட்டிற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார். மூத்த அமைச்சர்கள், அதிகாரிகள் சிலரும் பாதுகாப்பு நிறைந்த பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த நடவடிக்கை முடியும் முன்னரே அத்துமீறிய விமானம பத்திரமாக தரையிறக்கப்பட்ட தகவல் எங்களுக்கு கிடைத்தது என்றார்.

வில்மிங்டனில் இருந்து ஓகையோ நோக்கி சென்றபோது இந்த விமானம் வெள்ளை மாளிகை மீது அத்துமீறி பறந்துள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் வெள்ளை மாளிகை மீது விமானம் அத்துமீறி பறந்த சம்பவம் நடப்பது இது மூன்றாவது முறையாகும். கடந்த மே11ஆம் திகதி இதே போல விமானம் அத்துமீறி பறந்தபோது அதிபர் ஜோர்ஜ் புஷ் மனைவி லாரா புஷ் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். நேற்று முன்தினம் நடந்த சம்பவம் குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ந)

# இந்திய – பாக்-சமரச முயற்சிகளை இனி நிறுத்த முடியாது – சௌகத் அஜீஸ்

(இஸ்லாமாபாத்)

"காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆத்தமுள்ள, ஆக்கபூர்வமான முயற்சிகளே தேவை; இந்தியாவுடன தொடங்கியுள்ள சமரச பேச்சு வார்த்தையையும் நடவடிக்கையையும் இனி நிறுத்து முடியாது" என பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸ் தெரிவித்துள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களிடையே முசாபராபாதில் கடந்த வியாழனன்று பேசுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பான எந்தத் தர்வும இந்தியா, பாகிஸ்தான், காஷ்மீரிகள் என்ற மூன்று தரப்புக்கும் திருப்தியைத் தர வேண்டும். இப்போதுள்ள கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டையே நிரந்தர எல்லையாக இருக்க வேண்டும் என்ற யோசனையை மட்டும் ஏற்க முடியாது என்றும் அஜீஸ் தெரிவித்துள்ளார். (ந)

## மீண்டும் பறவைக்காய்ச்சல்

(வியட்னாம்)

வியட்னாமில் பறவைக்காய்ச்சலால் 73வயதான அனாய் நகரவாசி ஒருவர் உயிரிழந்துள்ளார்.வியட்னாமில் கடந்த ஒருசில மாதங்களில் பறவைக்காய்ச்சல் நோயினால் 39பேர் பலியாகியுள்ளனர்.

கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருந்த பறவைக்காய்ச்சல் நோய் கடந்த டிசம்பர் மாதம் முதல் மீண்டும் பரவத் தொடங்கியுள்ளது.

அந்தக் காலப்பகுதி முதல் இதுவரை இந்த நோயினால் 60பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-2)

ஈழமுரசு நிறுவனத்தால் கனடாவில் நடாத்தப்படும் "இனிய மாலை - 2005" நிகழ்வில் பங்கேற்பதற்காக நேற்றுமுன்தினம் இரவு கனடா சென்ற விடுதலை சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவர் தொல்.திருமாவளவனை ரொறன்ரோ பியர்சன் சர்வதேச வனூர்தி தளத்தில வரவேற்கையில்...



குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு - குறள்

வலம்புரி

## வேகமாக அதிகரிக்கும் களவு பொலிஸாரின் நடவடிக்கை என்ன?

ஷெல் தாக்குதல் விமானக் குண்டு வீச்சு என்ற அச்சங்களுக்கு மத்தியில் காலம் கழித்த குடாநாட்டு மக்கள் இப்போது கள்ளர்களின் தொல்லையால் மிரண்டு போயுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் நிம்மதியாக வாழவே முடியாதென்ற நிலைமையை கள்ளர்களின் தொல்லை உறுதியாக ஏற்படுத்திவிட்டது.

பொலிஸ் நிர்வாகம், நீதிபரிபாலனம், இராணுவத்தினரின் காவலரண்கள் இப்படி எந்த இடத்திலுமே இல்லாத பாதுகாப்பு வேலிகள் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றபோதிலும் கள்ளர்களின் திட்டங்கள் இலகுவாக நிறைவேறுவது எங்ஙனம் என்ற கேள்வி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் வீடுகளுக்குள் நுழையும் திருடர்கள் காலாகாலமாக சேர்த்து வைத்த செல்வங்களைக் கபளீகரம் செய்து கொள்வதாயின் இந்த மண்ணில் எப்படி நிம்மதியாக வாழமுடியும்.

யுத்தத்தின் கொடூரங்களுக்குள் இருந்து குலைந்துபோன தமிழினம் யுத்தநிறுத்த ஒப்பந்த காலத்திலாவது நிம்மதியாக இருக்கலாம் என்றால் அதனை திருடர்கள் அனுமதிப்பதாக இல்லை. ஒவ்வொரு நாளும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்ற போதிலும் அதனைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதாக இல்லை.

முறையீடு செய்யப்பட்ட களவை விசாரிப்பதற்காக பொலிஸார் வந்து குதிக்கின்றனர். பறிகொடுத்தவனிடம் குறுக்குக் கேள்விகள் பதிவுகள் அம்மளவுதான். எந்த நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் களவில் பொலிஸாருக்கு தொடர்பு இருக்கலாம் என்ற பேச்சு பரவலாக அடிபடுகிறது. குறிப்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய எல்லைக்குள் நடைபெறும் களவுகள் குறித்து யாழ்ப்பாணப் பொலிஸார் தீவிர நடவடிக்கைகள் எதுவும் எடுப்பதாக இல்லை என்ற குறைபாட்டை களவு கொடுத்தவர்கள் முன்வைக்கின்றனர்.

பொலிஸ் நிலையங்களும் நீதிபரிபாலனங்களும் இயங்குகின்றபோது கள்வர்களின் தொல்லை அதிகரிப்பதை எவ்வகையிலும் அனுமதிக்கமுடியாது.

பொலிஸ், இராணுவம் என்றால் அவர்கள் தமிழர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதற்காகவும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காகவுமே இருப்பவர்கள் என்ற நிலைப்பாடு இன ஒற்றுமைக்கு குந்தகமாக அமையும் என்பதை உணரவேண்டும்.

வீடுகளுக்குள் நுழையும் திருடர்கள் வீடு முழுவதையும் சல்லடை போட்டு தேடும் அளவிற்கு நிலைமை படு மோசமாகிவிட்டது.

வீட்டு உரிமையாளர்கள் எழமுடியாதவாறு மயக்க மருந்து விசிறப்படுவதாக பொதுமக்கள் பேசிக்கொண்டாலும் அதில் உண்மைத் தன்மை ஏதேனும் உண்டா? அதுபற்றி அறியும் பொறுப்பு யாருடையது? பொலிஸார் இது தொடர்பாகப் பொதுமக்களுக்கு பொது அறிவித்தல் விட்டார்களா? இல்லையே!

தமிழர்களின் சொத்துக்களை தமிழர்களே திருடிக்கொள்கிறார்கள் என்ற நிலைப்பாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸார் இருந்தால் தமிழர்களின் தாயகத்தை தமிழர்களே ஆளட்டும் என்று கூறுவதும் அவர்களுடைய கடமையல்லவா?

எதுவாயினும், யாழ்ப்பாணத்தில் நாளுக்கு நாள் நடக்கும் களவுகளுக்கு முடிபுகட்டப் பொலிஸார் முயற்சி எடுக்காவிட்டால் அதனால் ஏற்படும் அவப் பெயரை பொலிஸ் திணைக்களம் நிவர்த்தி செய்ய நீண்டகாலம் எடுக்கும்.

# கவிழும் அரசுக்கு முட்டுக்கொடுக்க வேண்டிய தேவை ரணிலுக்கு இல்லை

## ஐ.தே.க. எம்.பி ஜோன்சன் பெர்னாண்டோ

(கொழும்பு)

தான் அறிந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சி அதிகாரத்தில் மாற்றத்தைக்கொண்டு வரமாட்டேன் என எங்கும் குறிப்பிடவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்சன் பொ்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தினதும் மாகாண சபைகளினதும் அதிகாரத்தில் மாற்றத்தைக் கொண்டுவர மாட்டேன் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் உறுதியளித்திருபபதாக இரு தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தன்னைச் சந்தித்த பிரதியமைச்சர்களிடம் கூறியிருந்தார்.

இதுபற்றி ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. எனினும் தான் அறிந்த வகையில் தமது கட்சித் தலைவர் அவவாறு எதனையும் தெரிவிக்கவில்லை என ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜனாதிபதியின் கூற்றில் இருக்கும் உண்மை, பொய் பற்றி நான் எதுவும் கூறமுடியாது. எனினும்,அவர் அவ்வாறு கூறியிருப்பது பற்றி சில விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஜனாதிபதியின் கூற்றுக்கு அமைய பெரும்பான்மை இல்லாவிட்டாலும் அரசாங்கம் ஸ்திரமானது. ஜே.வி.பி அரசாங்கததில இருக்கும்போதே உலகில் உள்ள ஸ்திரமற்ற அரசு இது வென ஜனாதிபதி கூறியிருந்தார். தற்போது ஜே.வி.பியின் 39 உறுப்பினர்களும் விலகிய பின்னர் இந்த அரசாங்கம் ஸ்திரமானதென ஜனாதிபதி கூறுவது எப்படி என்பது பற்றி அவர் நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 15 மாதங்கள் இருப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். அரசியல் அமைப்பின் மூலம் கிடைத்திருக்கும் அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் எபபோது நடத்தப்பட வேண்டும் என தேர்தல் ஆணையாளரே அறிவிகக வேண்டும் என்பது இன்று நாடே அறிந்த உண்மை.

அதேபோல ஜனாதிபதி ஆட்சிக்காலம் என்பது 6வருடங்கள் எனபதனையும் நாட்டுமக்கள் அறிவர். அப்படி இருக்கையில ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலம் குறித்து அறிவிக்க அவருக்கு எந்த உரிமையும் கிடையாது.

நாடாளுமன்றத்தினதோ,மாகாண சபைகளினதோ ஆட்சி அதிகாரததை மாற்ற முயற்சிக்க மாட்டேன என ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் உறுதியளித்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நான் அறிந்த வகையில் எமது கட்சித் தலைவர் அவ்வாறான தொரு உறுதிமொழியை வழங்கவில்லை. அத்துடன், கவிழும் அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுக்க வேண்டிய தேவையும் அவருக்கில்லை.

எவ்வாறாயின் தான் சொல்வதற்கு முற்றிலும் மாறான செயலையே ஜனாதிபதி இதுவரை செய்து வந்துள்ளதால் இவ்வாறான விடயங்களைக் கூறி மக்களை ஜனாதிபதி இனிமேலும ஏமாற்றமுடியாது.

சொல்வதைச் செய்யும், செய்வதைச் சொல்லும் உண்மையான தலைவரை நாடடிற்கு நியமிக்கும் காலம் வந்துள்ளது எனவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

# உலக வங்கியின் உதவியுடன் மன்னாரில் வீடமைப்புத் திட்டம்

(மன்னார்)

உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் நான்கு கிராமங்களில் வீட்டு வசதி புனரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நான்கு கிராமங்களில் 32 புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் ஏனையவை புனரமைப்புச் செய்யபபடவுள்ளன.இந்த வீடுகளுக்கான பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

500 சதுரஅடியைக் கொண்ட இப் புதிய வீடுகள் இரண்டரை இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளன. இத் திட்டத்தை நேரில் பார்வையிடுவதற்காக உலக வங்கி நிதித் திட்டப பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் மன்னாருக்கு கடந்த வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்டனர்.

இதேவேளை, இப் பிரதேச செயலகப் பிரிவில் அளவக்கை, றகூல புதுவெளி ஆகிய இரு கிராமங்களில் 43 வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவவொரு வீடும் தலா 400 சதுர அடியில் தலா ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருப்பதாக நானாட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற)

## மீளக்குடியமர அனுமதிக்கப்படாவிடின் போராட்டங்களை முன்னெடுக்க முஸ்தீபு

(திருநெல்வேலி)

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டுள்ள சூழ்நிலையில் தம்மை வலிகாமப் பகுதியில் உள்ள கடற்கரை ஓரங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு வலிகாமப் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தங்களை மயிலிட்டியை அண்டிய பகுதிகளில் மீளக்குடியமாத்தவும் தமக்கான வீட்டுத் திட்டங்களை தமது பகுதிகளில் அமைத்துத் தரத் தவறினால் தாங்கள் அரசுக்கு எதிராகப் பாரிய போராட்டங்களை நடத்தவேண்டிய சூழ்நிலை உருவாகும் எனவும் வலிகாமப்பகுதி மீனவர்கள் எச்சரித்துள்ளனர். (ற-43)

## சாவ.வைத்தியசாலைக்கு ஜப்பான் அமைப்பு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் போது சேதமாக்கப்பட்ட சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் 15 மில்லியன் ரூபா செலவில் நிர்வாகப் பீடமும் ஆண்,பெண்களுக்கான விடுதிகளும் நிர்மாணிக்கபபடவுளளன எனத் தெரியவருகின்றது.

இத் திட்டத்திற்கான நிதியுதவியை ஜப்பான் நாட்டின் அமைப்பு ஒன்று வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் உள்ள இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கென நாளாந்தம் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் வருகை தருவது குறிப்பிடத தக்கதாகும். (அ-16)

## பாஸ் நடைமுறையை நீக்குமாறு வடமராட்சி மீனவர்கள் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள மீனவர்கள் மீண்டும் படகுகளில் மீன்பிடிக்கத் தொடங்கியுள்ளனர். இதுவரை காலமும் கட்டுமரங்களில் மட்டும் மீன்பிடித்து வந்த மீனவர்கள் தற்போது படகுகளில் மீன்பிடிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதனையடுத்து படையினர் பாஸ் கெடுபிடிகளை மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில் மீனவர்கள் பாஸ் பெறுகின்ற விடயத்தில் கடற்றொழிலாளர் சமாசம் படையினருக்கு எதிராகப் போராடி பாஸ் பெறும் முறையையும் கையொப்பமிடும் முறையையும் முழுமையாக நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என மீனவர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-43)

## பொதுக்கட்டமைப்பு முஸ்லிம் மக்களுக்கும் நன்மை பயக்கும்

### வடபகுதி முஸ்லிம் புத்திஜீவிகள் நம்பிக்கை

(திருநெல்வேலி)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களிற்கும் உரிய பலன் கிட்டும் என்று தாம் நம்புவதாக வடபகுதியில் உள்ள முஸ்லிம் புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

சில முஸ்லிம் அரசியல்வாதிகள் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராகக் கூச்சல் போடுகின்றமை அவர்களது சுய அரசியல் இலாபம் தேடும் முயற்சியாகும்.

முஸ்லிமகளைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகள் பொதுக்கட்டமைப்பில் கையொப்பமிட்டது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். அது சரியாக நடைமுறைப்படுத்தப்படும் போது நன்மைகள் கிடைக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-43)

## மயான அபிவிருத்தி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயான அபிவிருத்தி சபை ஒன்றினை யாப்பு ரீதியாக உருவாக்குவதற்காக பொது சபைக கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இன்று காலை 10.00மணிக்கு இடம்பெறவுள்ளதாக மயான அபிவிருத்திசபை தற்காலிக செயற்குழு அறிவித்துள்ளது. (அ-21)



## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எதை நினைக்கிறாயோ அதுவாக நீ ஆகிவிடுவாய். ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் போன்ற அவதாரப் புருஷரிடம் உனது சுமையை நீ ஒப்படைக்கும் போது, அவரை நினைக்காமல் உன்னால் இருக்க முடியாது. அவரை நினைப்பதால் நீ அவரைப் போன்று ஆகிவிடுகிறாய். அவர் மீது உனக்கு அன்பு சுரக்கின்றது.

சுவாமி விவேகானந்தர்

# பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை இம்மாத நடுப்பகுதியில் செயற்படும்!

## புனர்வாழ்வுச் செயலர் ஜெயசிங்க

(கொழும்பு)

சுனாமி நிவாரணக்கட்டமைப்பு இம்மாத நடுப்பகுதியிலிருந்து செயற்படும் என நிவாரண புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எம். எஸ்.ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சபையின் உயர்மட்டக் குழுவுக்கான உத்தியோகத்தர்கள் இவ்வாரம் நியமிக்கப்படுவார்கள். மாகாண பிராந்தியக் குழுக்களுக்கான அங்கத்தவர்களை சமாதான செயலகம் நியமிக்கும். இவ் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் திறைசேரி உறுதியளிக்கப்பட்ட நிதியுதவியை இலங்கை மத்திய வங்கி ஊடாக பெற்றுக்கொள்ளும்.

அரசாங்க நாணய பிரமாணங்களுக்கு அமைய சகல கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான 99 சதவீத ஒதுக்கீடுகள் அன்பளிப்புக்களாக கிடைக்கப்பெறுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு வீடுகள்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோரின் குடும்ப விபரங்களை எதிர்வரும் 7ந் திகதிக்கு முன்னர் அன்னையர் முன்னணித் தலைவியிடம் பதிவு செய்யும்படி பாதுகாவலர் சங்கம் கேட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோரின் குடும்பங்களில் வீடு, காணி இல்லாதவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுவழங்க யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் முன்வந்துள்ளார்.

அதனடிப்படையில் பூரண விபரங்களை சமர்ப்பிக்கும்படியும் கேட்டுள்ளார்.எனவே இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் தமது விபரங்களை எதிர்வரும் 7ந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என வடபகுதியில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பொது மக்கள் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சடலத்தை பொறுப்பேற்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மாலுசந்திக்கு அருகில் கடந்த 30ந் திகதி இடம்பெற்ற உழவு இயந்திர விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வின்சன் குணபாலன் அங்கு மரணமாகியுள்ளார்.

உடல் பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது. அவரது சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

50-60ற்கும் இடையிலான வயதினையுடைய அவர் நிலநிற கோட்டுச் சாரம் அணிந்திருந்திருந்ததாக யாழ்.போதனாவைத்திய சாலைப் பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# இலங்கையிடம் இருந்து அரிசி கொள்வனவு; உலக உணவுத்திட்டம் உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கை விவசாயிகளிடமிருந்து 18,130 மெட்றிக்தொன் அரிசியைக் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையில் உலக உணவுத்திட்டம் கைச்சாத் திட்டுள்ளது.

இது சம்பந்தமாக உடன்படிக்கையில் உலக உணவுத்திட்டமும் விவசாய மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சும் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளது.

இதற்கென 519 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அந்நிறுவனம் முன்வந்துள்ளது. வெளிநாட்டு அமைப்பொன்று உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து இவ்வளவு பெரிய தொகைக்கு அரிசியை கொள்வனவு செய்வது இதுவே முதற்தடவை என்று விவசாய மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சின் செயலாளர் திஸ்ஸவர்ண சூரிய தெரிவித்தார்.புத்தளம், குருநாகல, அநுராதபுரம், பொலன்நறுவை, அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பதுளை, மொனராகலை, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து அரிசி கொள்வனவு செய்யப்படவுள்ளது.

அதேபோல ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து 8080 மெற்றிக்தொன் அரிசியை கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. உலக உணவுத்திட்டத்தின் சார்பில் அதன் பிரதிநிதி ஜெப்மப்டிரிக்கும் விவசாய அமைச்சின் சார்பில் அதன் செயலாளர் திஸ்ஸவர்ணசூரியவும் இந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டனர். (ற-4)

# திறப்பு விழா

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் படிப்பகமும் கணணிப் பயிற்சிக் கூடமும் இன்று பிற்பகல் 6 மணிக்கு திறந்து வைக்கப் படும்.படிப்பகத்தை யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும், கணணிப் பயிற்சிக் கூடத்தை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினமும் திறந்து வைப்பார்கள்.

மன்றத் தலைவர் ச. பிரேமதாஸன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் ஓய்வுபெற்ற அதிபர் சி. தியாகராஜா, நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ. ரவீந்திர சர்மா, சனசமூக நிலைய உத்தியோத்தர் து. சோமசுந்தரம், கிராம அலுவலர் சி. இலட்சுமிகாந்தன் மற்றும் மன்ற போசகர் பூ. புலேந்திரராஜா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள். மன்றத்தின் வைர விழாவை முன்னிட்டு இடம்பெறவுள்ள 5 மைல் மரதன் ஓட்டப் போட்டி இன்று காலை 6 மணிக்கு மன்றமுன்றலிலிருந்து ஆரம்பமாகும். (து)

## அரசும் புலிகளும்...

இந்த பொதுக்கட்டமைப்பு கொண்டுள்ளது பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு பின்னர் இடைக்கால நிர்வாக சபையாகவும் அதனைத்தொடர்ந்து சமஷ்டித் தீர்வுக்கான ஒரு ஏற்பாடாகவும் வளரும் தன்மையையும் கொண்டுள்ளது.

இத்தனை ஏற்பாடுகளையும் எதிர்கால திட்டங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் சமுதாயம் முற்றுமுழுதாக புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று சேகு தாவூத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் தனி நிர்வாக அலகொன்றைப்பெற்று தங்களைத் தாங்களே ஆளுக்கின்ற உரிமை பொதுக்கட்டமைப்பினால் மறுக்கப்பட்டுள்ளது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார்.(ச-9)

# சேது சமுத்திரத்திட்டம் நேற்று அங்குரார்ப்பணம்

(மதுரை)

சேது சமுத்திரத் கால்வாய்த்திட்டத்தின் ஆரம்ப விழா மதுரையில் நேற்று மாலை இடம்பெற்றது.

இவ் விழாவுக்குச் சென்ற விருந்தினர்களை இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கழகச் செயலர் ஜோசப் வரவேற்றார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி உட்பட பல அரசியல் பிரமுகர்கள் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்தத் திட்டத்தினை ஆரம்பித்து வகையில் பொத்தான் ஒன்றை பிரதமர் மன்மோகன்சிங் அழுத்தியதும் நாகப்பட்டினம் அருகே கோடிக்கரை கடல்பகுதியில் கால்வாய் வெட்டும் பணி ஆரம்பமாகியது.

இந்தக் காட்சி மதுரை விழா மேடையில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இவ் அங்குரார்ப்பண நிகழ்வினை அடுத்து மதுரை எங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருந்தது.

7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ச-4)


L.M.L. பிரிடம், ஸ்கூட்டர் பாவனையாளர்களே

இந்தியாவிலும், கொழும்பிலும் உள்ள தொழில் நுட்பவியலாளர்கள் உங்கள் வாகனத்தை மீளாய்வு செய்வதற்காக யாழ்ப்பாணம் வருகைதர உள்ளார்கள். எனவே நீங்கள் காலதாமதமின்றி தொடர்பு கொள்ளவும்.

காலம்:- 04.07.2005 திங்கட்கிழமை

SPN மோட்டோர்ஸ்

171, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (c-1464)


## அரசியல்துறைப் பொறுப்பாளருடன்...

விடுதலைப்புலிகளுக்கிடையிலான பொதுக் கட்டமைப்பின் தேசிய பிராந்திய மாவட்ட மட்டங்களிலான குழுக்கள் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் பொதுக்கட்டமைப்பின் பிராந்திய மட்டத்திலான நிதிக்குப் புறம்பான அமைப்பு மற்றும் அதன் செயற்பாடுகள் போன்றவை பற்றியும் கலந்துரையாடபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கிளிநொச்சிக்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்ட இலங்கைக்கான நோர்வேயின் பதில்தூதுவர் ஒட்வார் லேகிற் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ள சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவ நடவடிக்கைக் கட்டமைப்பின் முக்கிய விடயங்கள் குறித்து சு.ப தமிழ்ச் செல்வனுடன் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-4)

## மின்சார வேலியில்...

அதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது கடற்படையினரின் மின்சார பாதுகாப்பு வேலியினை அகற்றவேண்டும், மீனவர்கள் பாஸ் திட்டம் ரத்துச்செய்யப்படவேண்டும், மீனவர்களின் வீடுகளுக்கு அருகேஉள்ள கடற் படைத்தளங்கள் அகற்றப்படவேண்டும் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. (ச-4,43)


எம்மிடம் சகலவிதமான ரீவீக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான றேடியோக்களும் மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

நியூ சிற்றி றேடர்ஸ்

மேல்மாடி இல.135/1 கஸ்தூரியார் வீதி

குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்

T.P: 021 222 3226

நாதன்ஸ்

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

அஜித், தேவயானி நடித்த

காதல்கோட்டை

கா. நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சினிமா

சங்கானை

சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த

5 அடி 2 அங்குலம்

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா

யாழ்ப்பாணம்

ஷங்கரின் இயக்கத்தில்



சியான் விக்ரம்,சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்

அந்நியன்

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

இசை: ஹரீஸ் ஜெயராஜ்

EXPOAIR your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-234999

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.